பக்கங்கள்: பன்னிரண்டு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6.00

சுடர்:15 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 22 ஞாயிற்றுக்கிழமை (05-03-2000) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:85

## மந்திகை ஈ.பி.டி.பி. அலுவலகம் மீது கிரனேட் வீச்சு! துப்பாக்கிச் சூடு!!

யாழ்ப்பாணம்,மார்ச்5

மந்திகையிலுள்ள ஈ.பி.டி.பி அலுவலகத்தின் பின்புறக் காவலரண் பகுதி மீது நேற்றிரவு 8.20 மணியளவில் கிரனேட் வீச்சும் துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த அலுவலகத்துக்கு பின்பக்கமாக வந்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது. பதிலுக்கு அலுவலகத்திலிருந்த ஈ.பி.டி.பி உறுப்பினர்களும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

இரு தரப்பும் சுமார் 5 நிமிடங்கள்வரை துப்பாக்கிப் பிரயோகம் நடத்தியதாகவும் இதன் பின்னர் தாக்குதல் நடத்தியவர்கள் தப்பியோடிவிட்டனர் என்றும் தமது தரப்பில் ஒருவர் சிறு காயமடைந்துள்ளதாகவும் மந்திகை ஈ.பி.டி.பி. அலுவலக வட்டாரங்கள் நேற்று இரவு தெரிவித்தன.

இந்தச் சம்பவத்தைத் தொடர்ந்து இரவு 8.45 மணியளவில் இராணுவத்தினர் ஈ.பி.டி.பி. அலுவலகத்துக்கு வந்து விசாரணைகளை மேற்கொண்டனர்.

கடந்த 29ஆம் திகதி இரவும் இந்த அலுவலகப் பகுதியில் தாக்குதல் முயற்சிச் சம்பவம் ஒன்று இடம் பெற்றது தெரிந்ததே. அலுவலகத்தின் முன்பாக நின்ற பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ.சிறிரங்கேஸ்வரன் மீது வீசப்பட்ட கிரனேட் வெடிக்கத் தவறியதால் அவர் மயிரிழையில் தப்பினார்.

(இ-5)

## படையினரின் சூட்டுக்கு அல்லாரையில் ஒருவர் பலி!

யாழ்ப்பாணம்,மார்ச்5

கொடிகாமம் அல்லாரை அ.த.க.பாடசாலைக்கு அருகில் நேற்றுக்காலை 7.30 மணியளவில் படையினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவர் பலியானார்.

இந்தப் பகுதியில் ரோந்து வந்த படையினரைக் கண்டு ஓடிய இவர் மீது படையினர் துப்பாக்கியால் சுட்டபோது அந்த இடத்திலேயே இவர் உயிரிழந்ததாக பொலீஸார் தெரிவித்தனர்.

இவரது சடலம் நேற்றுமாலை 6 மணியளவில் கொடிகாமம் பொலீஸாரினால் யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டது.

கொல்லப்பட்டவர் அதே இடத்தைச் சேர்ந்த தியாகராசா அகிலன் (வயது28)என்று தெரிவிக்கப்படுகிறது.

அதேசமயம் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டவர் புலிகள்

(12ஆம் பக்கம் பார்க்க)

### அரசமைப்புச் சீர்திருத்தம் குறித்துப் பேச்சு

# ஜனாதிபதியின் அழைப்பை ஏற்பதென ஐ.தே.க. முடிவு!

## நாளை செயற்குழு கூடி விடயங்கள் குறித்து ஆராயும்

கொழும்பு, மார்ச் 5

**அரசாங்கம் முன்வைத்துள்ள அரசமைப்புச் சீர்திருத்த யோசனைகள் தொடர்பாக ஆராய்வதற்காக இம்மாதம் 9 ஆம் திகதி சமுகமளிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விடுத்த அழைப்பை ஐக்கிய தேசியக் கட்சி ஏற்றுக்கொண்டுள்ளது.**

அன்றைய தினம் காலை 10.00 மணிக்கு நான்கு உறுப்பினர்களுடன் சமுகமளிக்கும்படி ரணிலை ஜனாதிபதி கேட்டிருந்தார்.

ஜனாதிபதியின் அழைப்பை ஐ.தே.க ஏற்றுக்கொண்டிருப்பதாக கட்சியின் பொதுச்செயலாளர் காமினி அத்துக்கோறள தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு நாளை ஸ்ரீ கோத்தாவில் கூடி ஜனாதிபதியுடனான சந்

(12ஆம் பக்கம் பார்க்க)

## அச்சுவேலிப் பகுதியில் தேடுதல்

வளலாய்,மார்ச்5

அச்சுவேலியிலுள்ள வளலாய், தம்பாலை, கதிரிப்பாய், இடைக்காடு போன்ற பகுதிகள் நேற்று பொலீஸாரினாலும் இராணுவத்தாலும் சுற்றிவளைக்கப்பட்டன.

அதிகாலை 5 மணி தொடக்கம் முற்பகல் 11 மணிவரையும் இந்தப் பகுதிகளிலுள்ள மக்கள் எவரும் வெளியே செல்ல அனுமதிக்கப்படவில்லை.

வீடு வீடாகச் சென்று சோதனையிட்ட படையினர் சந்தேகத்துக்குரிய இளைஞர்களை அழைத்து வந்து பொது இடங்களில் வைத்து விசாரணை செய்தபின்னர் விடுவித்தனர்.

(இ-5-178)

## 190 பக்தர்கள் மட்டும் நேற்று திருக்கேதீஸ்வரத்தில் வழிபாடு!

### கோயிலுக்கு வெளியே இராணுவம்

மன்னார்,மார்ச்5

திருக்கேதீஸ்வரத்துக்கு சிவராத்திரி வழிபாட்டுக்காக நேற்று மாலை 190 பக்தர்கள் சென்றனர் என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

கொழும்பிலிருந்து நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.யோகராஜன் தலைமையில் 43 பேரும், மன்னார் அரச அதிபர் தலைமையில் மன்னாரிலிருந்து 147 பேருமாக 190 பக்தர்கள் நேற்று மாலை 6.15 மணிக்கு திருக்கேதீஸ்வரத்தைச் சென்றடைந்தனர்.

முந்நூறு பொதுமக்கள் ஆலயத்துக்கு அனுமதிக்கப்பட்ட போதும் 190 பேரே நேற்று ஆலயத்துக்கு சென்றது குறிப்பிடத்தக்கது.

திருக்கேதீஸ்வரம் கோயில் கட்டடத்திலிருந்து இராணுவம் வெளியேறியபோதும் கோயிலுக்கு வெளியால் இராணுவம் நிற்பதனால் பக்தர்கள் சுதந்திரமாக நடமாட முடியாதுள்ளதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நேற்று மாலை ஆலயத்தைச் சென்றடைந்த பக்தர்கள் இரவு முழுவதும் சிவராத்திரி நிகழ்வுகளில் கலந்துகொண்டனர்.

## உண்ணாவிரதம் தற்காலிக நிறுத்தம்!

கொழும்பு,மார்ச்5

திருக்கேதீஸ்வரத்திலிருந்து இராணுவம் வாபஸ் பெறவேண்டுமெனக் கோரி கொழும்பு தமிழ் பிரமுகரான இ.நடராஜாவினால் (தில்லைக் கூத்தன்) நேற்று ஆரம்பிக்கப்படவிருந்த உண்ணாவிரதம் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டது.

திருக்கேதீஸ்வரத்திலிருந்து இராணுவம் வாபஸாகும் என்று ஜனாதிபதி வழங்கியுள்ள உறுதிமொழியினை அடுத்தும் - கொழும்பிலுள்ள இந்து அமைப்புக்களின் வேண்டுகோள்களையடுத்துமே உண்ணாவிரதத்தை நிறுத்துவதாக தில்லைக்கூத்தன் உதயனுக்குத் தெரிவித்தார்.

திருக்கேதீஸ்வரம் கோயில் பகுதியிலிருந்து இராணுவம் வெளியேறியுள்ளதாகதெரிவிக்கப்படுவது திருக்கேதீஸ்வர நாதனுடைய அருளே என்றும் அவர் கூறினார்.

(இ-5)

## புதுடில்லி மருத்துவமனையில் கதிர்காமர்

வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் சுகவீனம் காரணமாக புதுடில்லியிலுள்ள மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

## போதிய சாட்சிகள் இல்லை

கொழும்பு,மார்ச்5

புங்குடுதீவில் பாலியல்வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டுப் பின்னர் கொலை செய்யப்பட்ட அந்தணப் பெண்ணான சாரதாம்பாளின் படுகொலையுடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கைது செய்வதற்கு போதிய ஆதாரங்கள் கிடைக்கவில்லை.

தொல்லை தவிர்ப்புக் குழுவுக்கு பொலீஸ் குற்றப்புலனாய்வுப் பிரிவு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவத்தில் கொலையுண்ட சாரதாம்பாளின் சகோதரரே முக்கிய சாட்சியாக அடையாளம் காணப்பட்டுள்ளார். ஆனால் சந்தேகநபர்களைக் கைது செய்வதற்கான போதிய ஆதாரங்களை அவரோ ஏனைய சாட்சிகளோ வழங்கவில்லை என்று அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(இ-6)

## சாய்ந்தமருதுவில் பிஸ்ரல் குழு தாக்கு!

### இரு பொலீஸார் படுகாயம்

அம்பாறை,மார்ச்5

அம்பாறை - சாய்ந்தமருது பகுதியில் பிஸ்ரல் குழுவினர் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் கல்முனை பொலீஸ் நிலையத்தைச் சேர்ந்த இரு பொலீஸார் பலத்த காயமடைந்தனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு 7.30மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்த இரு பொலீஸார்மீது சாய்ந்தமருது அல்கமறூன் வித்தியாலயத்துக்கு முன்னால் வைத்து பிஸ்ரல் குழுவினர் சுட்டனர்.

இத்துப்பாக்கிச் சூட்டினால்

(12ஆம் பக்கம் பார்க்க)

### இலங்கைச் சம்பவங்களைக் கண்டித்து

## கனடாவில் பேரணி நடத்த பெண்கள் அமைப்பு ஏற்பாடு

ரொறன்ரோ,மார்ச்5

இலங்கையில் தமிழ்ப் பெண்கள் மீதான படையினரின் வன்முறைகள் மற்றும் பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் ஆகியவற்றைக் கண்டித்து கனடாவில் ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

உலகத்தமிழர் இயக்கத்தின் பெண்கள் அமைப்பின் ஏற்பாட்டில் இந்தப்பேரணி எதிர்வரும் சனிக்கிழமை கனடாவின் ரொறன்ரோ நகரில் நடைபெறும்.

இந்தப் பேரணியில் கனடாவிலுள்ள ஆயிரக்கணக்கான தமிழ்ப் பெண்கள் கலந்துகொள்ளவுள்ளனர். இதற்கான பிரசார வேலைகள் தீவிரமாக நடை பெற்றுவருகின்றன.

(இ-5)

## பெரியகல்லாறுப் பகுதியில் படையினர் கெடுபிடி அதிகரிப்பு

மட்டக்களப்பு,மார்ச்5

மட்டக்களப்பு பெரிய கல்லாறுப் பகுதியில் விசேட அதிரடிப் படையினரின் கெடுபிடிகள் அதிகரித்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இப்பகுதியில் மாலை 6 மணிக்குப் பின்னர் வீதிகளில் நடமாடும் பொதுமக்கள் மீது படையினர் தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

நேற்று அதிகாலை தமது வீட்டிலிருந்து தனது மகளின் வீட்டுக்குச் சென்றுகொண்டிருந்த இப்பகுதியில் வசிக்கும் இளைப்பாறிய ஆசிரியரான எஸ்.வீரகுலசிங்கம் (வயது 74) என்பவர் படையினரால் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளார் என்று தெரிவிக்கப்படுகிறது.

களுவாஞ்சிக்குடியில் முகாமிட்டிருக்கும் அதிரடிப்படையினர் இரவு நேரத்தில் பெரியகல்லாறுப் பகுதிக்கு வந்து பொதுமக்கள் மீது இவ்வாறான தாக்குதல்களை நடத்தி வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ-5)

# இரவில் வீடு புகுந்து பணம் நகை சூறை!

## மீசாலையில் சம்பவம்

வீட்டிலுள்ளோர் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த வேளையில் வீட்டுக்குள் புகுந்த திருடர்கள் அங்கிருந்து 32 பவுண் தங்க நகைகள், 40 ஆயிரம் ரூபா பணம் ஆகியவற்றைத் திருடிச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த புதன் இரவு மீசாலை மேற்கில் இடம்பெற்றது. குசினிப் புகைக்கூண்டினூடாக உள்ளே இறங்கிய திருடன் மின் குமிழ்களைக் கழற்றி வைத்துவிட்டு பொருள்களை அபகரித்துள்ளான்.

வீட்டுக்குள்ளிருந்த சூட்கேஸ்களை வெளியே எடுத்து வந்து கிணற்றின் பின்பக்கமாக வைத்து திறந்து அவற்றுள் இருந்த நகைகள், பணம் ஆகியவற்றை எடுத்துக் கொண்டு ஏனைய பொருள்களை திருடர்கள் அவ்விடத்திலேயே விட்டுச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

இத்திருட்டுத் தொடர்பாக சாவகச்சேரி பொலீஸ் நிலையத்தில் மீசாலை மேற்கு சோதியம்மா வீதியைச் சேர்ந்த பரிமளராசா சுபாஷினி என்பவரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-31-117)

## சீட்டிழுப்பு முடிவுகள்

### பண்ணை யோசெவ்வாஸ் ஆலய

கட்டட நிதிக்கான அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பின் முடிவுகள்

1 ஆம் பரிசு இலக்கம் 4065
2 ஆம் பரிசு இலக்கம் 3905
3 ஆம் பரிசு இலக்கம் 1117

ஆறுதல் பரிசுகள்:-

2805, 1361, 5367,
3419, 1302, 1167
4826, 4459, 0108
0062

பரிசுகளை குருநகர் புனித யாகப்பர் ஆலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

(74209) - பரிபாலகர்.

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

பிறப்பு 1944 - 09 - 16



இறப்பு 2000 - 02 - 04

### அமரா சின்னப்பு மகாலிங்கம்

(ஓய்வுபெற்ற யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்)

எமது குடும்பத்தலைவரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்கும் இவ்வேளையில் அன்னாரின் மரணச்சடங்கில் கலந்து கொண்டு எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் வேறு வழிகளில் உதவி புரிந்தவர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இன்று (05-03-2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**மனைவி, பிள்ளைகள்,**
**மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

அளவெட்டி
(தற்போதைய முகவரி:
புதிய வீதி, ஆறுகால்மடம்)

(C/11313)

## கண்ணீர் அஞ்சலி

எமது சக ஆசிரியை
செல்வி சுபத்திராவின் அன்புத் தந்தை

### அன்ரன் சிவலிங்கம்

அவர்களின் திடீர் மறைவால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்.
யா/சென். ஜேம்ஸ் மகளிர் பாடசாலை,
யாழ்ப்பாணம்.

(74200)

## கண்ணீர் அஞ்சலி

எமது சமாசத்தின் ஆயுள்கால உறுப்பினரான
திரு. செல்லத்தம்பி அவர்களின் மனைவி

### திருமதி செல்லத்தம்பி பவளம்

அவர்களின் மரணச் செய்தி கேட்டு மிகவும் ஆழ்ந்த துயரம் அடைகிறோம். அன்னாரின் பிரிவால் வாடும் அவரின் குடும்பத்தினருக்கு எமது கண்ணீர் அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

சமூக முன்னேற்றக் கழகங்களின் சமாசம்
ச.மு.க.ச. பிராந்தியம் நல்லூர்.

(74212)

# திருமலையில் கிரனேட் வீச்சு!

திருகோணமலை மாவட்டம் மூன்றாம் கட்டை பொலீஸ் காவல் நிலையம் மீது நேற்றுமுன்தினம் காலை விடுதலைப்புலிகள் மேற்கொண்ட கிரனேட் வீச்சில் 2 பொலீஸ் கான்ஸ்டபிள்கள் பலத்த காயம் அடைந்தனர்.

குமாரதாஸ் (வயது 29), தர்மதாஸ (வயது 27) ஆகியோரே பலத்த காயமடைந்த நிலையில் திருகோணமலை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தச் சம்பவத்தை அடுத்து மூன்றாம் கட்டைப் பகுதியில் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை இராணுவத்தினரும் பொலீஸாரும் தேடுதல் மேற்கொண்டதாகத் திருமலைச் செய்திகள் தெரிவித்தன.

# 3 இளைஞர் கைது!

யாழ். கொட்டடி, கொக்குவில் ஆகிய இடங்களில் மூன்று இளைஞர்கள் படையினரால் கைது செய்யப்பட்டுள்ளதாக மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்தில் அவர்களது உறவினர்களால் முறைப்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

கொட்டடியைச் சேர்ந்தவர்களான சேதுநாதன் சுதர்சன் (வயது 31), நவரட்ணம் சுரேஸ்கரன் (வயது 20), கொக்குவில் கிழக்கைச் சேர்ந்த செல்வராசா நந்தகுமார் (வயது23)ஆகியோரே கைதானவர்களாவர்.

மானிப்பாய் வீதியைச் சேர்ந்த சேதுராமன் காண்டீபன் (வயது 25) என்னும் பூட்டுத் திருத்தும் தொழிலாளியை கடந்த மூன்று தினங்களாகக் காணவில்லை என்றும் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# வரி அறவீடு இல்லை என்கிறது புளொட்

வவுனியா மாவட்டத்தின் எந்த ஓர் இடத்திலும் பொதுமக்களிடம் இருந்து புளொட் அமைப்பு வரியை அறவிடுவதில்லை என அந்த அமைப்பின் வவுனியா மாவட்டச் செயலகம் விடுத்த பத்திரிகைச் செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியாவில் பல்வேறு இடங்களிலும் புளொட் அமைப்பின் பேரில் பொது மக்களிடமிருந்து வரி அறவிடப்படுவதாக பல்வேறு முறைப்பாடுகள் தமக்கு கிடைத்ததை அடுத்தே இந்தச் செய்திக் குறிப்பு மீண்டும் விடுக்கப்பட்டுள்ளதாகவும்.

இத்தகைய நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களை பொதுமக்கள் இனங்கண்டு தமக்கு அறிவிக்க வேண்டும் எனவும் -

புளொட் அமைப்பு அறிவித்துள்ளது. (உ-7-164)


**லிபேட்டி**
அச்சுவேலி
அர்ஜுன், ரம்பா
நடித்த
**சுதந்திரம்**
(புதிய வெளியீடு)
காட்சிகள் 10.30, 2.30
T.P : 070-212223
070-212678
(74112)

**ராஜா**
யாழ்ப்பாணம்
கடைசி வாரமாக
08-03-2000 வரை
சரத்குமார், தேவயாணி
நடித்த
**சூர்யவம்சம்**
09-03-2000 முதல்
**படையப்பா**
காட்சிகள்
10.30, 2.30, 5.00
(C/11282)

**நாகம்ஸ்**
சுன்னாகம்
இன்று முதல்
அஜித், சிம்ரன்
நடித்த
**அவள் வருவாளா**
(ரீல்ஸ்)
காட்சிகள் 11.00, 2.30
(புதிய நேரம்)
(C/11243)


# மரண அறிவித்தல்கள்

## சின்னத்துரை பாலா (சாள்ஸ்)

யாழ்ப்பாணம் இல.141, பிரதான வீதியில் வசித்த பாலா என்று அழைக்கப்படும் சாள்ஸ் அவர்கள் நேற்றுமுன்தினம் (03.03.2000) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் சின்னத்துரை - செல்லமணி ஆகியோரின் அன்பு மகனும் மகேந்திரா(கொழும்பு), அழகேந்திரா(கொழும்பு), சந்திரா(கொழும்பு), வசந்தி இம்மனுவல் அவர்களின் அன்புச் சகோதரரும் சறோ, துயின், செல்வராணி, காலஞ்சென்ற இம்மனுவல் ஆகியோரின் மைத்துனரும், சிறோமி, றொஷானி, தயானி, வினோத், பிரசாந்த் ஆகியோரின் சிறிய தகப்பனாரும் தயாளனின் (சம்பத்தரிசியார் கல்லூரி) மாமனாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (05.03.2000) ஞாயிறு மாலை 3.30 மணிக்கு (புதிய நேரம்) புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு நல்லடக்கத்துக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.141, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
சின்னத்துரை
(தகப்பன்)

(74214)

## திருமதி பவளம் செல்லத்தம்பி

நல்லூரைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பவளம் செல்லத்தம்பி நேற்றுமுன்தினம் (03.03.2000) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் செல்லத்தம்பி (ஓய்வு பெற்ற M.L.T, நல்லூர், ஓய்வூதியர் நலன்புரிச் சங்கத்தின் செயலாளர், யாழ்.ப.நோ.கூ. சங்கத்தின் கிளை 12இன் செயலாளர்) அவர்களின் அன்பு மனைவியும் அஜந்தா (சுருக்கெழுத்தாளர், யாழ்.மாவட்ட நீதிமன்றம்), சுகந்தா(பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும் காலஞ்சென்ற செல்லத்துரை தங்கபூபதி, லீலாவதி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற லோகேஸ்வரன்(இலங்கை மின்சாரசபை - அஜந்தா போட்டோ & வீடியோ), குலேஸ்வரன்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் பிருந்தா, வசந்த், நிசாந்த், கீர்த்திகா, நிரோசன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (05.03.2000) ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

63, சங்கிலியன் வீதி,
நல்லூர்.

தகவல்:
மு.செல்லத்தம்பி
(கணவர்)

(74198)

## கந்தையா சிவபாதசிங்கம்

(Asst.Valuer)

கொக்குவிலைப் பிறப்பிடமாகவும் இடைக்காட்டை வசிப்பிடமாகவும் கொண்ட இளைப்பாறிய விலைமதிப்பீட்டதிகாரி (Asst. Valuer) கந்தையா சிவபாதசிங்கம் 02.03.2000 வியாழக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - அன்னரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் லோகநாயகியின் அன்புக் கணவரும் சஞ்ஜீவின் (மொரட்டுவ பல்கலைக்கழகம்) அன்புத்தந்தையும் கமலாதேவி (U.K.), சிற்பாலன், சிவநேசன் (கொழும்பு), சிவலிங்கம் (J.P., கணக்காய்வாளர், சிமெந்துக் கூட்டுத்தாபனம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2000) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காலை 10.00 மணியளவில் தகனக்கிரியைக்காக இடைக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

முதலியார் வளவு,
இடைக்காடு,
அச்சுவேலி.

தகவல்:
சி.சஞ்ஜீவ்
(மகன்)

(74215)

## திருமதி முத்தையா வேதவல்லி

திருமதி முத்தையா வேதவல்லி நேற்று (04.03.2000) சனிக்கிழமை இல15, மெமோறியல் லேன், மானிப்பாயில் காலமாகிவிட்டார்.

அன்னார் மாரீசன்கூடலைச் சேர்ந்த காலஞ்சென்ற முத்தையா (மலாயன் பென்சனியர்) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கோவிந்தர் - நாகமுத்து தம்பதிகளின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான பரராசசிங்கம், பாலசிங்கம், கந்தசாமி ஆகியோரின் அன்புச் சகோதரியும் நடராஜா, மோகனவல்லி, கவிமுத்துமணி, காலஞ்சென்ற திருஞானசம்பந்தர், சிவநேசன் ஆகியோரின் அன்புத் தாயாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2000) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 11மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைக்காகப் பூதவுடல் பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.15, மெமோறியல் லேன்,
மானிப்பாய்.

தகவல்:
மு.நடராஜா
(மகன்)

(74211)

## குமாரசாமி ஜெயக்குமார்

கலட்டியைப் பிறப்பிடமாகவும் மூத்தவிநாயகர் வீதி, நல்லூரை வதிவிடமாகவும் கொண்ட குமாரசாமி ஜெயக்குமார் காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற குமாரசாமி - தங்கேஸ்வரி ஆகியோரின் புதல்வனும் பவளம்மாவின் அன்புக் கணவரும் தயாளன், மயூரன், தாரணி ஆகியோரின் அன்புத் தந்தையும் சிவகுமார், சந்திரகுமார், இந்திரகுமார், இராசேஸ்வரி, ரட்ணேஸ்வரி ஆகியோரின் பாசமிகு சகோதரரும் புவனேஸ்வரி, அமிர்தலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் தம்பிஐயாவின் மருமகனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (05.03.2000) ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 2மணிக்கு நடைபெற்றுப் பூதவுடல் அன்னாரின் இல்லத்தில் இருந்து செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

30/14, மூத்தவிநாயகர் வீதி,
யாழ்ப்பாணம்.

தகவல்:
அமிர்தலிங்கம்
(மைத்துனர்)

(74216)

# யாழ்.பல்கலைக்கழகத்தில்உள்ள மரங்களுக்குப் பெயர் சூட்டல்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ் பல்கலைக்கழக வளாகத்தினுள் உள்ள மரங்களுக்கு பெயர்ப்பலகைபொருத்தும் நிகழ்வும் பாகுபாட்டு ரீதியான கல்விக்கு இலகுவாக 'யாழ். வளாகத்திலுள்ள மரங்களை இனங்காணலும் பட்டியற்படுத்தலும்' எனும் நூல் வெளியீட்டு நிகழ்வும் அண்மையில் யாழ்.பல்கலைக் கழகத்தில் தாவரவியற்றுறைத் தலைவர் திருமதி என். ரவிமன்னன் தலைமையில் நடைபெற்றன.

இந்த நிகழ்வின் போது யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் உள்ள 75 மரங்களுக்கு அவற்றின் தாவரவியற் பெயர்,குடும்பப்பெயர், ஆங்கிலப்பொதுப்பெயர் தமிழ்ப்பொதுப்பெயர் அடங்கிய பெயர்ப்பலகைகள் மரங்களுக்கு எந்த விதத்திலும் பாதிப்பு ஏற்படாத வகையில் பொருத்தப்பட்டன.

இந் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரை ஆற்றிய யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை:—

தாவரவியற்றுறை மேற்கொண்டுள்ள இந்த முயற்சியைப் பாராட்டுவதாகவும் தாவரவியற்றுறை ஆராய்ச்சிகள் மேற்கொள்வதிலும் கவனம் செலுத்த வேண்டும் எனவும்— அம்பலவி மாம்பழ விதை உற்பத்தியையும் அது தொடர்பான ஆராய்ச்சிகளையும் செயற்படுத்த வேண்டும் எனவும்—

கேட்டுக்கொண்டார். சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் குமாரவடிவேல் பேசுகையில்:—

யாழ். குடாநாட்டில் உள்ள ஏனைய தாவர இனங்களையும் இனங்கண்டு பாகுபடுத்த வேண்டும் எனவும்—

தற்போது அருகிவரும் மருத்துவத்திற்குத் தேவையான தாவரஇனங்களை விருத்தி செய்வதில் கூடிய அக்கறை கொள்ள வேண்டும் எனவும் கூறினார்.

தாவர இனப்பாகுபாட்டை அகரவரிசையில் ஒழுங்கு செய்து வெளியிட்டுள்ள நூலின் முழுமையான பயனை இலகுவில் எல்லோரும் பெற்றுக் கொள்ள முடியும் என சிறப்பு விருந்தினராகக்கலந்து கொண்ட யாழ். இந்து முன்னாள் அதிபர் குகதாசன் தெரிவித்தார். (ஐ-8)

# காணாமற்போன அரச ஊழியர்களில் தங்கியிருப்பவர்களுக்கு நஷ்டஈடு!

## மாதாந்தக் கொடுப்பனவும் கிடைக்கும்

யாழ்ப்பாணம், மார்ச் 5

குடாநாட்டில் பயங்கரவாத செயல்கள் காரணமாகக் காணாமற்போன அரச மற்றும் கூட்டுத்தாபன ஊழியர்களில் தங்கியிருப்பவர்களுக்கு நஷ்டஈடு மற்றும் 55 வயது வரையான சம்பளம் என்பவற்றை வழங்க யாழ். செயலகம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இது தொடர்பாக பதில் அரச அதிபர் திருமதி ப. திலகநாயகம் பிரதேச செயலகங்கள் மற்றும் திணைக்களங்களுக்குச் சுற்றறிக்கை ஒன்றை அனுப்பியுள்ளார்.

காணாமற்போனவர்களின் பாதுகாவலர்சங்கப் பிரதிநிதிகள் கடந்த 28 ஆம் திகதி தம்மைச் சந்தித்த சமயம் இந்தக் கொடுப்பனவை பல குடும்பங்கள் இதுவரை பெறவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளனர் என அவர் தமது சுற்றறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

காணாமற் போனோரில் தங்கியிருக்கும் குடும்பத்தவர்களின் அன்றாட வாழ்க்கை பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளதால் இந்தக் கொடுப்பனவை வழங்குவது அவசியம் என அதில் தெரிவித்துள்ளார்.

பொது நிர்வாக அமைச்சின் சுற்றறிக்கை இலக்கங்கள் 21/88, 59/89 ஆகியவற்றின் அடிப்படையில் அவர்கள் இந்தக் கொடுப்பனவைப் பெற உரித்துடையவர்களாகையால் அந்தக் கொடுப்பனவை வழங்க ஏற்பாடு செய்யும்படி பதில் அரச அதிபர் கேட்டுள்ளார். (ஐ-3)

# புராணபடனப் போட்டியில் வெற்றியீட்டியோர்

திருநெல்வேலி, மார்ச் 5

அகில இலங்கை சைவப் புலவர் சங்கம் கடந்த மாதம் 27ஆம் திகதியன்று வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் நடத்திய யாழ். மாவட்ட ரீதியிலான புராண படனப் போட்டியில் வெற்றியீட்டியவர்கள் பெயர் விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அவை வருமாறு:

### ஆண்கள் பிரிவு

★ முதலாமிடம்: ஏ. நிமலன், த. பிரகாஷ் (தெல்லிப்பழை யூனியன் கல்லூரி)

★ இரண்டாமிடம்: ம. சாயிரூபன், (கொக்குவில் இந்துக் கல்லூரி)

★ மூன்றாமிடம்: ந. கேசவசர்மா (நல்லூர் இந்து தமிழ்ப் பெண்கள் பாடசாலை)

### பெண்கள் பிரிவு

★ முதலாமிடம் தமிழினி தங்கவடிவேல், புஸ்பவதனி கோபால் (மருதனார்மடம், இராமநாதன் மகளிர்கல்லூரி)

★ இரண்டாமிடம்: சு. ஜானகி, த. டயானா (நல்லூர் இந்துதமிழ்ப் பெண்கள் பாடசாலை)

★ மூன்றாமிடம்: போ. வேணுகாதேவி, செ. ஊர்மிளா (தெல்லிப்பழை யூனியன்கல்லூரி).

(ஐ-135)

# பார்வையாளர் மண்டபம் அமைப்பு

யாழ்ப்பாணம், மார்ச் 5

நெடுந்தீவு றோ. க. மகளிர் மகாவித்தியாலயத்தில் பார்வையாளர் மண்டபம் ஒன்று அண்மையில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத்திட்ட ஒதுக்கீட்டில் இருந்து ஈ. பி. டி. பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா வழங்கிய நிதி மூலம் இந்த மண்டபம் அமைக்கப்பட்டுள்ளது.

அத்துடன் அங்கு கணனிப் பயிற்சிப்பட்டறை ஒன்று அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. அமைப்பின் தீவக அமைப்பாளர் என். மதனராஜா தெரிவித்தார்.

(ஐ-3)

# சமுர்த்திப் பணிகளைப் பரிசீலிக்க கணக்காய்வாளர் நியமனம்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். மாவட்டத்தில் சமுர்த்தி வேலைகளைக் கண்காணிப்பதற்கெனக் கணக்காய்வாளர் ஒருவர் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

சமுர்த்திக் கணக்காய்வாளராக எஸ். அமலதாஸ் கடந்த 2 ஆம் திகதி யாழ். செயலகத்தில் தனது கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளார்.

யாழ். மாவட்டத்திலுள்ள 14 பிரதேச செயலர் பிரிவுகளிலும் மேற்கொள்ளப்படும் சமுர்த்தி வேலைகளை இவர் கண்காணிப்பார். அத்துடன் திட்டம் தொடர்பான கணக்காய்வு நடவடிக்கைகளையும் மேற்கொள்வார் எனத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாவட்டத்தில் தற்பொழுது 42 சமுர்த்தி முகாமையாளர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(ஐ-5)

## நாட்டில் சமாதானம் வேண்டி

# வவுனியாவில் 43 தினங்கள் தொடர் உண்ணா நோன்பு

வவுனியா, மார்ச் 5

போர் ஓய்ந்து நாட்டில் நிரந்தர சமாதானம் மலர இறை ஆசிவேண்டி வவுனியா புனித அந்தோனியார் ஆலயத்தில் எதிர்வரும் 8 ஆம் திகதிதொடக்கம் தொடர்ந்து 43 நாள்களுக்கு உண்ணா நோன்பும், விசேட வழிபாடுகளும் நடத்தப்படவுள்ளன.

யேசுநாதரின் திருப்பாடுகளை நினைவு கூரும் தவக்காலத்தில் இந்தவிசேட வழிபாடுகள் நடத்தப்படவுள்ளன.

தினமும் காலை 8 மணிக்கு ஆரம்பிக்கும் உண்ணா நோன்பு பிற்பகல் 5 மணிக்கு விசேடவழிபாடுகள், சொற்பொழிவுகளுடன் முடிவுறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-7-164)

# பருத்தித்துறை - செம்பியன்பற்று புதிய பஸ்சேவை ஆரம்பம்

வடமராட்சி, மார்ச் 5

பருத்தித்துறை — செம்பியன்பற்று பஸ்சேவை நேற்று முன்தினம் முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்கிலுள்ள செம்பியன்பற்றுப் பகுதி மக்களின் வசதிகருதி பருத்தித்துறையிலிருந்து செம்பியன் பற்றுக்கு பஸ்சேவை ஒன்றை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்குமாறு பருத்தித்துறை பிரதேச சபைத் தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் ஈ. பி. டி. பி செயலாளரும் யாழ். மாவட்ட எம். பி. யுமான டக்ளஸ் தேவானந்தாவிடம் கேட்டிருந்தார்.

டக்ளஸ் தேவானந்தா எம். பி. போக்குவரத்து அமைச்சருடன் தொடர்பு கொண்டு கோரிக்கை விடுத்ததைத் தொடர்ந்து வட பிராந்திய போக்குவரத்துச் சபையின் பருத்தித்துறை டிப்போவினால் இச்சேவை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தினமும் பருத்தித்துறையிலிருந்து செம்பியன்பற்றுக்கும் செம்பியன்பற்றிலிருந்து பருத்தித்துறைக்கும் மூன்று சேவைகள் நடத்தப்பட்டு வருகின்றன.

(ஐ-173)

# பேச்சுப்போட்டி

அரியாலை 81 ஆவது சுதேசிய திருநாள்கொண்டாட்டத்தை ஒட்டி நடத்தப்பட்டு வரும் முன்னோடிக் கலைப் போட்டிகளில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்3மணிக்கு அரியாலை சனசமூக நிலைய மண்டபத்தில் பேச்சுப் போட்டிகள் இடம்பெறும்.

கீழ்ப்பிரிவு, மத்தியபிரிவு, மேற்பிரிவு என மூன்று பிரிவாகப் போட்டி இடம்பெறும்.

(ஐ-86)

# கட்டடப் பொருள்கள் வரும்

யாழ்ப்பாணம், மார்ச் 5

தெல்லிப்பழை புற்று நோய்ச் சிகிச்சை நிலையத்தினைப் புனரமைப்புச் செய்வதற்கான கட்டடப் பொருள்கள் கொழும்பிலிருந்து கப்பல் மூலம் தருவிக்கப்படவுள்ளன.

இப்பொருள்கள் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்ததும் புற்றுநோய்ச் சிகிச்சை நிலையப் புனரமைப்பு வேலைகள் உடனடியாக ஆரம்பமாகும் என்று தெரிவிக்கப்படுகிறது.

(ஐ-5-9)

# கட்டடப் பொருள் உதவி

தென்மராட்சி, மார்ச் 5

கடற்றொழில் திணைக்களத்தினால் கிளாலி,புலோப்பளை ஆகிய இடங்களில் நிர்மாணிக்கப்படவுள்ள பாதிக்கப்பட்ட மீனவர்களுக்கான வீடமைப்புத் திட்டத்திற்கு கட்டடப் பொருள்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த வீடமைப்புத் திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளவர்களுக்கான கருத்தரங்கு கடந்த வியாழனன்று புலோப்பளையில் நடைபெற்றது.

இத்திட்டத்தின் கீழ் இப்பகுதியில் பாதிக்கப்பட்ட 90 குடும்பங்களுக்கு வீடுகள் அமைத்துக் கொடுக்கப்படவுள்ளன.

(ஐ-117)


## இலங்கை இசை வேளாளர் சங்கம்

## மாதாந்த இசை நிகழ்வு

காலம்: 5-3-2000 ஞாயிறு பி. ப. 2 மணி (ப. நே.)
இடம்: நல்லூர்,ஸ்ரீதுர்க்கா தேவி மணி மண்டபம்
தலைவர்: செஞ்சொற் செல்வன்
ஆறு. திருமுருகன் அவர்கள்

ஆசியுரை: ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக
பரமாச்சாரிய சுவாமிகள்
(நல்லை 2 ஆவது குருமஹா சந்நிதானம்)

### நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- இறை வணக்கம்
- மங்கள இசை
- நாதஸ்வரம்: N. இராஜேஸ்வரன், S. பாலமுருகன்
- தவில்: R. வசந்தமோகன், M. சுதானந்தன்
- முகவீணைக் கச்சேரி:

நாதஸ்வர வித்துவான் P.S. பிச்சையப்பாபிள்ளை
வயலின் — திரு. A. ஜெயராமன்
தவில் — திரு. P. கணேசன்
மிருதங்கம் — திரு. M. கஜன்
முகர்ச்சிங் — திரு. V. ரமணன்

- இசைக்கச்சேரி

திரு. S. பத்மலிங்கம் — பாட்டு
திரு. R. இராதாகிருஷ்ணன் — வயலின்
திரு. S. துரைராசா — மிருதங்கம்

- நன்றியுரை; இசைவேளாளர் சங்கத்தலைவர் திரு. K. R. சுந்தரமூர்த்தி

சேகர் ஒலி அன்ட் கலையகம், நல்லூர்.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

விழாக் குழுவினர்.

அன்பளிப்பு:
இ. தங்கேஸ்வரன்
நகைத் தொழிலகம்
கலைமகள் வீதி, நல்லூர் வடக்கு, கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (74203)



## கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் மாநகரசபை
ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி உறுப்பினராகவிருந்து
01-03-2000 அன்று இனந்தெரியாத நபர்களால்
சுட்டுக் கொல்லப்பட்ட

## வைரமுத்து அன்ரன் சிவலிங்கம்

அவர்களது குடும்பத்தினருக்கும் உறவினர்களுக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினருக்கும் எமது அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் மரணமடைந்த அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்தித்து அவருக்கு எமது கண்ணீர் அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

தலைவர், உறுப்பினர்கள், ஊழியர்கள்,
வலி. கிழக்கு பிரதேச சபை.

வலி. கிழக்கு பிரதேச சபை,
தலைமை அலுவலகம்,
நீர்வேலி. (சி/11309)

## ✶ இனிய நல்வாழ்த்துக்கள் ✶

புத்தாயிரமாம் ஆண்டில்

### 60 ஆவது அகவையை

நோக்கிக் காலடி எடுத்து வைத்திருக்கும் யாழ். பல்கலைக்கழக கல்வியியற்புல சிரேஷ்ட விரிவுரையாளரும் இராமநாதன் நுண்கலைக் கழக நடனத்துறைத் தலைவருமான

### கலாநிதி சபா. ஜெயராசா

அவர்களைக் குடும்பசமேதராய் சகல வளமும்பெற்று பல்லாண்டு வாழ எமது மனமார்ந்த இனிய நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

கல்விசாரா ஊழியர்கள்,
**இராமநாதன் நுண்கலைக்கழகம்,**
**யாழ். பல்கலைக்கழகம்.**

[74161]

## பிறப்பின் சிறப்பினை வாழ்த்தி வணங்குகின்றோம்

எங்கள் ஆசான்

### கலாநிதி சபா. ஜெயராசா அவர்கள்

1. ஆளுமை மிக்க மாணவ சமூகத்தைக் கட்டி எழுப்பியவர்.
2. கற்பித்தலில் இற்றைவரை நரிவடையா மேன்மை மிகு ஆசான்.
3. பட்டங்கள் பதவிகளின் உயர்விற்கேற்ப தனது மனிதத்துவத்தை உயர்த்திய சமூகச் சிற்பி.

வாழும்போதே வாழ்த்தி வணங்கும் மாணவி
**செல்வி மலர் சின்னையா**
(விரிவுரையாளர்)

106, கோயில் வீதி,
நல்லூர்.

வரணி வடக்கு,
வரணி.

[74159]

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



### அமரர் மாதர் கந்தையா

தோற்றம்: 05-03-1911
மறைவு: 04-02-2000

திதி: 04-02-2000 சதுர்த்தசி

மாதம் ஒன்று மறைந்ததுவே நீங்கவில்லை எம்துயரம்
பாசத்தின் உறைவிடமே வழிநடத்திய எங்கள்
அன்புத் தெய்வமே!
என்றென்றும் உங்கள் நினைவு எம்மைவிட்டு
அகலாது; அழியாது.
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப்
பிரார்த்திக்கின்றோம்.

எமது தந்தை மாதர் கந்தையா அவர்கள் இறைவனடி சேர்ந்த செய்தி அறிந்து நல்லாறுதல் மொழி பகர்ந்து தேற்றிய உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், அனுதாபச் செய்திகள் அனுப்பிய வெளியிடத்தோர், மலர்வளையம் சாத்தியோர், யாழ். வர்த்தக வங்கி ஊழியர்கள் மற்றும் இறுதிக் கிரியைகளில் கலந்துகொண்டோர், சகல நிகழ்வுகளிலும் துணைபுரிந்தோர், இன்று (5-3-2000) ஞாயிற்றுக்கிழமை நடைபெறும் வீட்டுக்கிருத்தியத்திலும் கலந்துகொள்ளும் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம்.

நன்றி.

**பிள்ளைகள், மருமக்கள்,**
**பேரப்பிள்ளைகள்.**

இராஜகாரியர் வீதி,
மானிப்பாய் வடக்கு,
மானிப்பாய்.

(74142)

## நிலக்கடலை அறுவடை செய்ய முடியாத நிலை

யாழ்ப்பாணம், மார்ச் 5

பளை, முகாவில் பகுதியில் நிலவும் போர்ச் சூழலினால் அங்கு செய்கை பண்ணப்பட்ட 15 ஏக்கர் நிலக்கடலையை அறுவடை செய்ய முடியாதுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த டிசெம்பர் மாதம் இப் பகுதியிலிருந்து இடம் பெயர்ந்த விவசாயிகள் மீண்டும் அங்கு மீளக்குடியமர முடியாத நிலை ஏற்பட்டுள்ளது தெரிந்ததே.

(ஐ-5-10)

## கோட்ட மட்ட மெய்வல்லுநர் போட்டி

புன்னாலைக்கட்டுவன், மார்ச் 5

பளை - கொடிகாமம் கோட்ட மட்டமெய்வல்லுநர் போட்டிகள் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 1.30 மணிக்கு கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெறும்.

தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் மு. வ. செல்வராசா முதன்மை விருந்தினராகக் கலந்து கொள்வார்.

(ஐ-133)

## மயானத்தைப் புனரமைக்கக் கோரிக்கை

சண்டிலிப்பாய், மார்ச் 5

முற்றாகச் சேதமடைந்த நிலையிலிருக்கும் ஆனைக்கோட்டை கரையாப்பிட்டி இந்து மயானத்தில் ஈமக் கிரிகைகளுக்காக வரும் மக்கள் தங்கும் மண்டபத்தை புனரமைத்துத் தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் உயரப்புலம் கிராம அபிவிருத்திச் சங்கம் கடித மூலம் கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை —

இப் பகுதியில் நீண்ட காலமாகத் திருத்தப்படாத நிலையிலுள்ள வீதிகளையும் ஒழுங்கைகளையும் திருத்தித் தருமாறும் இக்கடிதத்தில் வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

[ஐ-135]

## கிளைக் குழுத் தேர்தல்கள்

அரியாலை, மார்ச் 5

ஏப்ரல் மாதத்தில் இரண்டு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களை தெரிவு செய்வதற்கான தேர்தல்களை நடத்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாகக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் தெரிவித்தார்

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக் குழுத் தேர்தல் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதியும் —

வலிகாமம் கிழக்கு வட பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் கிளைக்குழுத் தேர்தல் ஏப்ரல் 9 ஆம் திகதியும் நடத்தப்படவுள்ளன.

(ஐ—17)

## கணனிப் பயிற்சி பூர்த்தி

சண்டிலிப்பாய், மார்ச் 5

மானிப்பாய் மகளிர் கல்லூரியில் மானிப்பாய் பரிஷ் லயன்ஸ் கழகத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்ட 4 மாத கணனிப் பயிற்சியில் 10 பேர் சித்தியடைந்துள்ளனர். இவர்களுக்கான சான்றிதழ்கள் விரைவில் வழங்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் திருமதி வி. பசுபதிப்பிள்ளை தெரிவித்தார்.

இரண்டாவது கட்ட பயிற்சி நெறி இம்மாதம் முற்பகுதியில் ஆரம்பமாகவுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

(ஐ-135)

## 14 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 — 09 — 1910



உதிர்வு 05 — 03 — 1986

### முதலியார் வை. மகேசன் (ஜே. பி.)


வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்த செம்மல்
செய்வன திருந்தச் செய்த செம்மனச் செல்வர்
தெய்வப் பணிகள் பற்பல தேசமோங்கச் செய்தவர்
வானுலகில் ஐயா நீ வாழி நீடு.

தங்கள் பிரிவால் துயருறும்:
மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
மைத்துனர், உறவினர், நண்பர்கள்

லிங்க வாசா, நவாலி.

(74147)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பும் நன்றி நவிலலும்



### கந்தையா இளையப்பா

தோற்றம் 07–06–1912
மறைவு 04–02–2000

மதியத்தில் விதி வந்து மறைந்தீரையா
கதியுற்று கடல் கடந்து நிற்கின்றோமே
காற்றலையில் உங்கள் குரல் கேட்டிடாதோ
காலனவன் உமைச் சிறைவைத்தானோ
சிறையல்ல கலறக்கண்டன் சிரடிக்கீழ்
மறையோதி வாழ்ந்திடவே தாழ்பணிந்தோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் 31 ஆம் நாள் சபிண்டீகரணக் கிரியைகளும் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையும் இன்று (05—03—2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் அனைவரையும் வருகை தந்து ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வத்தின் மரணச் செய்தி கேட்டு நேரில்வந்து எங்கள் துக்கத்தில் கலந்துகொண்டு அனுதாபம் தெரிவித்த அனைவருக்கும் இறுதிக்கிரியைகளில் ஒத்தாசை புரிந்த அன்பர்களுக்கும் எங்கள் உள்ளம் நெகிழ்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

பிரிவால் துயருறும்

**மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்,**
**பூட்டப்பிள்ளைகள், பெறாமகன்.**

சி. ஸ்ரீபாலசிங்கம்
கோகுல வீதி,
கோண்டாவில் வடக்கு.
கோண்டாவில்.

(சி/11297)

## உதயன்

### சமூகப்பற்றோடு விழித்தெழுக!

குடாநாட்டு மக்கள்— பெரியவர்களும் இளைஞர்களும்— மிகப் பெரும் எண்ணிக்கையில் உளவியல் ரீதியாகத் தாக்கத்துக்கு ஆளாகியுள்ளனர் என்ற தகவல் புள்ளி விவரங்களோடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் வயதில் பெரியவர்களில் பதினைந்து சதவீதத்தினர் உளவியல் தாக்கத்துக்கு ஆளாகி உள்ளனர் ஆனால் மாணவர்களோ 41 சதவீதமானோர் இந்நவகையில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

போர் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருப்பதன் பக்க விளைவுகளில் இதுவும் ஒன்றெனலாம். எதிர்காலச் சந்ததியினரான மாணவர்களில் சுமார் அரைவாசிப் பேர் உளவியல் தாக்கத்துக்கு ஆளாகியிருப்பது மிகவும் பயங்கரமான நிலையாகும். வருங்காலத்தில் மனத்தாக்கம் உள்ள சமுதாயம் ஒன்று உருவாகப் போகின்றது என்பதற்கான அபாய அறிவிப்பாகும் இது!

உளத்தாக்கத்துக்கு ஆளானவர்கள மது மற்றும் போதைப் பொருள்களுக்கு அடிமைகளாகி வருகின்றார்கள் என்பது மேலும் ஆபத்தான நிலையைச் சுட்டி நிற்கிறது.

மது, புகை, போதைப் பொருள் என்ற மூன்றும் மனிதனின் ஆரோக்கியத்தை அறுத்து, சமூகத்தைச் சிரழித்து, நாசமாக்கிவிட வல்லன. ஆகவே உளத்தாக்கத்துக்கு ஆளானவர்களை இபற்றை நாடாது தடுப்பது சமுதாயத்தின் — சமூக நலன் நாடிகளின்— பெரும் பணியாகும். உடனடியாக, அவசர அவசியமாக இதில் விரைந்து கவனம் செலுத்த வேண்டும்.

காலம் கெட்டுவிட்டது; சமுதாயம் சீரழிந்து வருகிறது என்று வெறுமனே பேசிக் கொண்டிருப்பதால் பயனில்லை. குடாநாட்டுச் சமூகத்தை நோக்கி — வருங்காலச் சமூகத்தை நோக்கி — சீரழிவு, பேரழிவு என்ற வெள்ளம் பாயத் தொடங்கி விட்டது. அதனை இப்போதே தடுக்க அணை கட்டாவிட்டால், எங்கள் வருங்கால சமுதாயம் வெட்கத்துக்கு உரிய ஒன்றாகக் குன்றி விடும்.

சீரும் சிறப்பும் பண்பும் நற்கலாசாரமும் உடைய குடாநாட்டுத் தமிழர்களின் வாரிசுகள், எல்லாவற்றையும் தொலைத்துவிட்டு, கேவலமான நிலைக்குத் தள்ளப்பட உள்ளார்கள் என்பது மிகவும் வேதனைக்கு உரியதாகும்.

ஏனைய நாடுகளும், சமூகங்களும் இருபத்தோராம் நூற்றாண்டினைத் தமதுவளங்களைப் பெருக்கி அதனூடு வாழ்வையும் பல படிகள் உயர்த்தி முன்னேறுவதற்கு உழைக்கும் காலமாக்கியுள்ளன

ஆனால் எமது இளசுகளோ பின்னோக்கிச் செல்வதற்கு ஆயத்தமாகிறார்கள்! இந்த வகையைச் சேர்ந்தவர்கள் தமக்கு மட்டும் புதைகுழி வெட்ட ஆரம்பிக்கவில்லை. யாழ்ப்பாணச் சமூகத்துக்கே சீரழிவுப் புதைகுழியை வெட்டிக் கொண்டிருக்கிறார்கள்.

இந்தப் பேராபத்திலிருந்து குடாநாட்டின் வருங்கால சமூதாயத்தைக் காப்பாற்றுவது இன்றைய சந்ததியினரின் பொறுப்பாகும். மதுவுக்கும் ஏனைய போதைப்பொருள்களுக்கும் இளஞ்சந்ததியினர் அடிமையாகாமல் கண்காணிப்பதும் தடுப்பதும் பெரியவர்களின் கடமை. வரவிருக்கும் பேரபாயம் குறித்து மாணவர்களிடையே விழிப்புணர்வை உண்டாக்க வல்ல திட்டங்களும் அவற்றை சமூகப்பற்றோடு செயற்படுத்த வல்ல தொண்டர்களும் தேவை. இப்போது விழித்தெழாவிடில் குடாநாடு தாழ்ந்து போவது தவிர்க்க முடியாததாகிவிடும்.

---

மல்லாகம் ம. வி. உயர்தர வகுப்பில்

## விஞ்ஞானப் பிரிவு ஆரம்பிக்குமாறு மாணவர்கள் மகஜர் சமர்ப்பிப்பு

வலி. வடக்கு, மார்ச் 5

ஜி. சி. ஈ. உயர்தரத்தில் விஞ்ஞானப் பிரிவை ஆரம்பிக்க வசதி செய்யுமாறு மல்லாகம் மகாவித்தியாலய உயர்தர மாணவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பான மகஜர் ஒன்றை வடக்கு — கிழக்கு மாகாண கல்விப் பணிப்பாளர் க. கந்தசாமியிடம் மாணவர்கள் நேரில் கையளித்துள்ளனர்.

உயர்தரப் பிரிவுகள் உள்ள முன்னணிப் பாடசாலைகளில் கல்வி கற்கத் தமக்குள்ள வசதியீனங்களைச் சுட்டிக்காட்டியுள்ள மாணவர்கள் விஞ்ஞானத் துறையை ஆரம்பிக்குமாறு வலியுறுத்திக் கேட்டுள்ளனர்.

மல்லாகம் மகாவித்தியாலயத்தில் உயர்தரத்தில்கலை, வர்த்தகம் ஆகிய பிரிவுகள் தற்போது உள்ளன.

(ஐ-86)

## கப்பலில் வந்த பெண்ணின் ரொக்கப் பணம் அபேஸ்!

### காங்கேசன்துறையில் சம்பவம்

திருநெல்வேலி, மார்ச் 5

திருகோணமலையிலிருந்து 'லங்கா முடித்த' கப்பல் மூலம் வந்த பெண் பயணி ஒருவரின் 14 ஆயிரம் ரூபா ரொக்கப் பணம் கங்கேசன்துறையில் உள்ள பிரயாணிகள் தங்கு மடத்தில் வைத்து அபகரிக்கப்பட்டுள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இரவு தமது கைப்பையை பக்கத்தில் வைத்துக் கொண்டு நித்திரையில் இருந்த பிரஸ்தாப பெண் அதிகாலையில் விழித்தெழுந்து பார்த்த போது கைப்பையிலிருந்த 'பேர்ஸ்' திருட்டுப் போய்விட்டதைக் கண்டு அதிர்ச்சியடைந்தார். உடனடியாக அங்கு கடமையிலிருந்த பாதுகாப்புப் படை அதிகாரியிடம் இது பற்றி முறைப்பாடு செய்யப்பட்டது. அங்கிருந்த ஒலி பெருக்கி மூலம் பணம் திருட்டுப் போனதைப் பற்றியும் பணத்தை எடுத்தவர்கள் அதனைத் திருப்பிக் கொடுக்கும் படியும் இல்லாது விட்டால் அனைத்துப் பயணிகளும் சோதனையிடப் படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டது.

தமது பொருள்களையும், உடைமைகளையும், அவதானமாக வைத்திருககும் படியும் அறிவுறுத்தப்பட்டது. ஆனால் திருடப்பட்ட பணம் திரும்பக் கிடைக்கவில்லை. (ஐ-135)

## இளங்கலைஞர் மன்றத்தில் விரைவில் இசை வகுப்புகள்

அரியாலை, மார்ச் 5

நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தில் விரைவில் இசை வகுப்புக்களை நடத்துவதற்கான முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருவதாக மன்றப் பொருளாளர் சு.பால சண்முகநாதன் தெரிவித்தார்.

மன்றத்தைக் கலைக் கூடமாக மாற்றி, கலைத் துறையை ஊக்குவிக்கும் முகமாக வயலின், மிருதங்கம், வீணை, வாய்பாட்டு போன்ற இசை வகுப்புக்கள் விரைவில் நடத்தப்படவுள்ளன.

மன்றத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் இம்முறை 45சத வீதமான இளங்கலைஞர்கள் கலந்து கொண்டனர்.

மன்றத்தின் தலைவராக சோ. பத்மநாதன் தெரிவு செய்யப்பட்டார். (ஐ-17)

## இலவச வகுப்புக்கள்

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பணிமனையில் பணியாற்றி வரும் அலுவலர்களுக்கும்இப் பிரிவு கிராம அலுவலர்களுக்குமான இலவச ஆங்கில மொழி, சிங்கள மொழி வகுப்புகள் சனிக்கிழமை தோறும் நடத்தப்பட்டு வருகின்றன.

ஆறுமாத காலத்திற்கு இவ் வகுப்புகள் நடைபெறும் என்றும், பின்னர் நடத்தப்படும் பரீட்சையில் சித்தியடைபவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது, (ஐ-135)

## சைவ வித்தியா விருத்திச் சங்க பவள விழாவும் சிலை திறப்பும்

யாழ்ப்பாணம். மார்ச் 5

திருநெல்வேலி சைவ வித்தியா விருத்திச்சங்க பவள விழாவும் இந்து போர்ட் இராசரத்தினம் சிலை திறப்பு விழாவும் எதிர்வரும் 11 ஆம் 12 ஆம் திகதிகளில் திருநெல்வேலியில் நடைபெறவுள்ளன.

முதல் நாள் நிகழ்வுகள் 11 ஆம் திகதி காலை இல்லச் சிறார்களின் தேவாரத்துடன் ஆரம்பமாகும்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெறும் ஆரம்ப விழாவில் ஆசியுரையை நல்லை ஆதீன குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் நிகழ்த்துவார். வாழ்த்துரையை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி தங்கம்மா அப்பாக்குட்டி வழங்குவார். சிறப்புரையை யாழ். அரசாங்க அதிபர் க. சண்முகநாதன் நிகழ்த்துவார்.

இந் நிகழ்வின் போது பெரியார் இந்துபோர்ட் இராசரத்தினத்தின் உருவச் சிலையை யாழ். அரச அதிபரும் இல்லச் சிறுமி ஒருவரும் திறந்து வைப்பார்கள்.

பாராட்டுரைகளை யாழ். நல்லூர் பிரதேச செயலர் பா. செந்தில்நந்தனன், தெல்லிப்பழை பிரதேச செயலர் திருமதி ப. திலகநாயகம், நல்லூர் பிரதேச சபை தலைவர் க. மணிபல்லவராஜன், சிறுவர் நன்னடத்தை அதிகாரி திருமதி க. சிவராஜா, திருமதி இ. பொன்மலர் ஆகியோரும்—

நினைவுரைகளை அ. பஞ்சாட்சரம், த. சிவராஜா, திருமதி. ச. அருள்நங்கை ஆகியோரும் நிகழ்த்துவார்கள்.

சைவச் சிறுவர் இல்லச் சிறார்களின் கலை நிகழ்வுகளும் நடைபெறும்.

(ஐ-5)

## நொந்துபோன எமது சகோதரர்களை ஆறுதற்படுத்த உறுதி பூணுவோம்

மனிதர்களில் பலர் வாழ்வின் துன்பங்களையும் தோல்விகளையும் இழப்புகளையும் கண்டு கலங்கி நிற்கின்றனர். அல்லது தப்பிஓட முயல்கின்றனர். மார்க்கங்கள்பலஇருந்த போதும்மனித இனத்தின் துன்பங்கள் ஓயவில்லை. கடந்த நூற்றாண்டின் யுத்தக்கறைகளும் கொலைவெறியும் 21-ம் நூற்றாண்டிலும் தொடரப் போகின்றனவா?

இந்நிலையில் கிறிஸ்தவர்கள் ஒவ்வொருவரும் கிறிஸ்துவாக வாழப் பழகவேண்டும். துன்பங்களை விரும்பி விலகி ஓடுவதற்குப் பதிலாக துன்பங்களை எதிர்த்து சமூக அடக்குமுறைகளை கட்டவிழ்த்து விடுவோரை எதிர்த்து நீதிக்காகக் குரல் கொடுக்கமுன்வர வேண்டும். மிஷனரிகளின் தியாகங்களும் சாதனைகளும் நம் மண்ணில் மறைந்து போகாமல், அன்பின் பணி செய்வதற்கு நிறுவனங்களை மட்டும் நம்பாமல், ஒவ்வொரு மனிதரும் பாடுபடவேண்டும்.

கிறிஸ்தவ மத வாதியாக, ஏனைய சகோதர மதத்தினை விமர்சிப்பவர்களாக, எமது நண்பர்களை சமய ரீதியில் புண்படுத்துபவர்களாக வாழாமல் மனிதர்களாக — கிறிஸ்து போதித்த —சிலுவையின் பாதையில் வாழ முற்படுவோம். லூக்கா நற்செய்தி 7:11—17 பகுதியிலே கிறிஸ்து ஒரு விதவைத் தாயைப் பார்த்து ''அம்மா அழாதீர்'' என்றார். ஏனெனில் தன் மகனை இழந்து அந்தத் தாய் பட்ட வேதனை ஆண்டவரை இரக்கம் கொள்ள வைத்தது. இன்று நமது மண்ணில் விதவைகள், அனாதைகள், அங்கவீனர்கள் இவர்களது கண்ணீரைத் துடைக்க, ஆறுதற்படுத்த நாம் எத்தனை பேர் தயாராக இருக்கின்றோம்?

ஞாயிறு நற்பிரசாதம்

கிறிஸ்தவம் வாழ்ந்து காட்டப்படவேண்டிய நெறி, திருமறை அழகுப்பொருள் அல்ல. வாழவேண்டிய வழிமுறைகளைத் தரும் மறை. நம் மண்ணில் எல்லாவற்றையும் இழந்து இனி இழப்பதற்கு எதுவுமே இல்லை என்ற நிலையில் நமது சகோதரிகளின் கண்ணீரைத் துடைக்க முன்வருவோம். இரத்தக் கண்ணீர் சொரிந்து நிவாரணம் நாடி நிற்கும் மக்களுக்காக என்ன செய்கின்றோம்; என்ன செய்ய வேண்டும் என்பதனைச் சிந்திப்போம்; செயலாற்றுவோம்.

சமய வேலிகளுக்குள்ளே அடைபட்ட மனிதர்களாக, சுயநலத்துடன் வாழப் போகின்றோமா? தமிழர் தம் இழிநிலைக்கு என்ன காரணம்? மறைகள் நமது மனங்களில் இல்லாது மரப் பெட்டிகளில் பூட்டப்பட்டது தானோ? சமயப் போதனைகளை நாடகமாக நடிப்பதை நிறுத்தி வாழ்விலே வாழ்ந்து காட்டுவோம். 21 ஆம் நூற்றாண்டில் நமக்குத் தேவை விண்ணிலுள்ள தெய்வங்கள் அல்ல; மண்ணில் வாழும் இறை மக்களே. சமய வேலிகளைத் தாண்டி நம் நொந்துபோன சகோதரிகளை ஆறுதல்ப் படுத்த ஒவ்வொருவரும் உறுதி பூணுவோமாக.

அருள் சகோதரன்
செ. ஜோய்
துரைரத்தினம்

★

நாளை

மாசி 23

திங்கட்கிழமை

திதி: அமாவாசை முற்பகல் 11.17 வரை.

நட்சத்திரம்: சதயம் காலை 7.28 வரை.

மகாசிவராத்திரி விரதம்

சுபநேரம்: 12.25—1.55

ராகுகாலம்: 7.55—9.25

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

**உதய வாக்கு**

தூரத்தில் இருக்கும் உறவினர்களைக் காட்டிலும் அண்டைவீட்டுக்காரன் மேலானவன்.

- இத்தாலி

## தேவாலய மூப்பர் பொறுப்பேற்பு

நெடுந்தீவு, மார்ச் 5

கச்சதீவு புனித அந்தோனியார் தேவாலயத்தின் மூப்பராகப் புலவர் ஏ. டபிள்யூ அரியநாயகம் இம் மாதம் முதலாம் திகதி முதல்பொறுப் பேற்றுக் கொண்டார்.

கடந்த 60 வருடங்களாக மேற்படி தேவாலயத்தின் மூப்பராகப் பணியாற்றி வந்த ஞா. அந்தோனிப்பிள்ளை தமது பதவிப் பொறுப்புக்களை அவரிடம் கையளித்தார்.

(ஐ-111)

**யாழ். வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் ஆலய வருடாந்த மஹோற்சவ சிறப்பம்சம்**

### நல்வாழ்வு ஈவாய்!

கல்லாரும் கற்றவரும் களிக்க நின்றே
கன்மவினைப் பாவமெலாம் கரையச் செய்வோய்
நல்லாரும் மற்றவரும் நாளும் போற்ற
நண்ணுமவர்க் கெந்நாளும் நலமே நல்கும்
சொல்லாரும் இன்மொழிவா லாம்பி கையாள்
சொக்கநடம் ஆடுவண்ணை வைத்தீஸ் வரனே
எல்லோர்க்கும் நல்வாழ்வில் இகமீ தீய
எம்பெருமான் பொன்னடியை ஏற்றுவேனே!

— நாயன்மார்கட்டு இராசையா குகதாசன்

# பாட அறிவுக்கு வெளியே மாணவரின் கற்றலைத்தூண்டும் பொதுப் பரீட்சை

## பொதுச் சாதாரணப் பரீட்சை குறித்த ஓர் அறிமுகம்

புதிய கல்விச் சீர்திருத்தத்தின்படி இந்த ஆண்டு முதல் அமுலுக்கு வரவுள்ள உயர்தர மாணவருக்கான புதிய 'பொதுச் சாதாரண பரீட்சை' குறித்த ஓர் அறிமுகம் இது.

ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் கட்டாயமாக இந்தப் பொது அறிவுப் பரீட்சைக்குத் தோற்றவேண்டும். பல்கலைக்கழக அனுமதி இந்தப் பரீடசைப் புள்ளிகளையும் அடிப்படையாகக் கொண்டே வழங்கப்படவுள்ளது.

ஒருநாட்டின் எதிர்காலம் கல்வித்திட்டத்தினாலும் அதனை நடைமுறைப் படுத்தும் முறையினாலும் நிர்ணயிக்கப்படுகின்றது. இந்த வகையில் புதிய கல்விச் சீர் திருத்தங்கள் முன்வைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப் படுகின்றன.

புதிய கல்விச் சீர்திருத்தங்கள் பாடசாலை மட்டக் கல்வியில் ஆரம்பக்கல்வி, கனிஷ்ட இடைநிலைக் கல்வி, சிரேஷ்ட இடைநிலைக் கல்வி என மூன்று நிலைகளில் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

சிரேஷ்ட இடைநிலைக் கல்வி மட்டம் உயர்தரத்தில் (ஜி சீ.ஈ. உயர்தரத்தில்) புதியகல்விச் சீர்திருத்தத்தின் பிரகாரம் பாடத் திட்டத்தின்படி மூன்று பிரதான பாடங்களுக்கும் பல்கலைக்கழக அனுமதியைக் கருத்திற் கொண்டு பொதுச் சாதாரண பரீட்சைக்கும் மாணவர்கள் தோற்ற வேண்டும். பொதுச் சாதாரண பரீட்சையில் சித்தியடையாத மாணவர்கள் பல்கலைக்கழக அனுமதியைப் பெறமுடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

### புதிய பரீட்சை

நடைமுறையில் உள்ள பாடசாலைக் கல்வி முறையில் அண்மைக் காலத்தில் மாணவர்கள் சந்தித்து வந்த பிரதானமான பொதுப் பரீட்சைகள் மூன்று.

★ ஐந்தாம் வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சை.

★ ஜி. சி. ஈ. சாதாரண தரப் பரீட்சை.

★ ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சை.

இந்தப் பரீட்சைகளுடன் 2000 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதத்தில் புதிய பரீட்சை ஒன்று நடைபெறவுள்ளது. அதுதான் 'பொதுச் சாதாரண பரீட்சை'

இந்த வருடம் ஒகஸ்ட் மாதம் ஜி. சி. ஈ. உயர்தரப் பரீட்சையில் பழைய பாடத் திட்டம் (4 பாடங்கள்) புதிய பாடத்திட் ம் (3 பாடங்கள்) என இரண்டு பாடத்திட்டத்திற்கும் பரீட்சைகள் நடைபெறவுள்ளன.

புதிய பாடத் திட்டத்தின் பிரகாரம் (மூன்று பாடங்கள்) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்கள் மேலதிகமாக பொதுச் சாதாரண பரீட்சைக்குத் தோற்ற வேண்டும். பல்கலைக்கழக அனுமதிக்குரிய வெட்டுப் புள்ளியைப் பெறுவோர் பொதுச் சாதாரண பரீட்சையிலும் சித்திக்கான இழிவுப் புள்ளியைப் பெற்றால்தான் பல்கலைக்கழக அனுமதியைப் பெறமுடியும்.

### பொதுச் சாதாரண பரீட்சையின் கட்டமைப்பு

பொதுச் சாதாரணப் பரீட்சை பற்றி கல்வி, உயர் கல்வி அமைச்சும் பல்கலைக் கழக மானிய ஆணைக்குழுவின் பரீட்சை அலகும் இணைந்து வெளியிட்டுள்ள கற்றல் வழிகாட்டியில் —

''மாணவர்கள் பரீட்சையில் விடையளிக்கத் தேவையான விடயங்களை மனனம் செய்யும் நாட்டத்தைக் கொண்டிருப்பதால் அவர்கள் பரீட்சையை நோக்காகக் கொண்டு கற்றலில் ஈடுபட்டுள்ள குழுவினராக மாறியுள்ளனர். அவர்கள் தமது சுற்றாடல் பற்றியோ, அரசியல், பண்பாடு, வரலாறு, பொருளாதாரம் என்பன பற்றியோ எந்த விதமான ஆர்வமும் கொள்ளாமல் பாடவிடயங்களை மாத்திரம் மனப்பாடம் செய்யும் நாட்டத்தைக்கொண்டுள்ளனர். இந்த நிலை மாற வேண்டும் அவர்கள் சுயமாகச் சிந்திப்பவர்களாக அமைய வேண்டும்'' எனக் கூறப்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் திறமையான பயன் உள்ள பிரஜைகளையும் உயரிய அறிவுசார் ஆற்றல்களை விருத்தி செய்யும் நோக்குடன் பொதுச் சாதாரண பரீட்சை அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

பொதுச் சாதாரண பரீட்சைக்கான நேரம்:- இரண்டரை மணித்தியாலம்.

மாணவர்களிடம் பரீட்சிக்கப்படவுள்ள நுண்ணறிவு இயல்புகள் நான்கு:-

★ பொது விழிப்பு

★ பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்.

★ நியாயிக்கும் (பகுத்தாய்வு, முறைமை, எண், வெளி) ஆற்றல்.

★ கிரகிப்பதற்கும்தொடர்பாடலுக்குமான ஆற்றல்.

வினா எண்ணிக்கையும் புள்ளியும்:-

★ பொதுவிழிப்பு 15 வினாக்கள் — 25 புள்ளிகள்

★ பிரச்சினை தீர்க்கும் ஆற்றல்15 வினாக்கள் — 25 புள்ளிகள்.

★ நியாயிக்கும் ஆற்றல் 15 வினாக்கள் — 25 புள்ளிகள்

★ கிரகிப்பதற்கும்தொடர்பாடலுக்குமான ஆற்றல் 15 வினாக்கள் — 25 புள்ளிகள்.

60 பல்தேர்வு வினாக்களைக் கொண்டிருக்கும் வினாப்பத்திரத்தில் ஒவ்வொரு வினாவுக்கும் ஐந்து விடைகள் கொடுக்கப்பட்டு சரியான விடையைத் தெரிவு செய்ய வினவப்படும்.

1. பொதுவிழிப்புணர்வு:

சர்வதேச பொருளாதாரம், தேசியப் பொருளாதாரம், சர்வதேச அரசியல், சர்வதேச சமூகவியல், தேசியப் பண்பாடு, சர்வதேச சுற்றாடல், சர்வதேச சட்டம், தேசிய விஞ்ஞானம், சர்வதேச தொழில் நுட்பம் போன்ற அம்சங்களை உள்ளடக்கிய வினாக்களைக் கொண்டிருக்கும்.

2. பிரச்சினை தீர்த்தல்:

பிரச்சினையைத் தீர்க்கத் தேவைப்படும் யாதாயினும் ஒரு தகவலை அல்லது பல தகவலை இனங்காணல், தகவல்களை யாதாயினும் ஒரு விதத்தில் சேர்த்து சந்தர்ப்பங்களை மீளக் கட்டமைத்தல், பிரச்சினையைத் தீர்ப்பதற்கு உதவும் ஒப்புவமைகளை அல்லது தகவல்களை ஒத்த சந்தர்ப்பங்களில் இனம் காணல்— என்ற வகையால் வினாக்கள் அமைந்திருக்கும்.

(வளரும்)

**ஞான. ஆதவன்**

சூரியகாந்தி — உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

# பாரம்பரிய கூத்துக்களை வளர்க்க நெருக்கடி மத்தியிலும் அரிய முயற்சி

## நெடுந்தீவில் இன்று 'ஞானசவுந்தரி' அரங்கேற்றம்

பாரம்பரியக் கலைகளை அழியவிடாது பாதுகாக்கும் நோக்குடனும் அடுத்த தலைமுறையினரான இளஞ் சந்ததியினருக்கு அதனைக் கையளிப்பதன் மூலம் தொடர்ந்து பேண வழிவகுக்கும் வகையிலும் நெடுந்தீவு மத்தி சென். ஜோன்ஸ் இயல் இசை நாடக மன்றத்தினர், அதன் தலைவரும் அண்ணாவியாருமான எஸ். ஜேசுதாஸன் அவர்களால் நெறியாள்கை செய்யப்பட்ட 'ஞானசவுந்தரி' என்னும் இசை நாடகத்தினை இன்று ஞாயிற்றுக்கிழமை நெடுந்தீவு, புனித யுவானியார் ஆலய நியோகு அரங்கில் அரங்கேற்றவுள்ளனர்.

இம்முயற்சி பாரம்பரிய கலைகள் மேம்பாட்டுக்கழகச் செயலாளர் செல்லையா மெற்றாஸ்மயில் நெடுந்தீவு சென்று அண்ணாவியாரை ஊக்கப்படுத்தியதன் ஓர் அங்கமாக அமைகிறது.

ஏழு வயதுக்கும் அறுபத்து மூன்று வயதுக்கும் இடைப்பட்ட இருபத்திரண்டு கலைஞர்கள் இதில் பங்குபற்றி நடிக்கவுள்ளனர். பிரதான பாத்திரங்களுள் ஒன்றான தர்பமராசாவாக அண்ணாவியார் ஜேசுதாஸனும் ஞானசவுந்தரியாக மரியமெஜட்டனிளாறாவும் பிலேந்திரன் ராஜாவாக மரியதாசும் துருக்கி ராஜாவாக சவிரிமுத்துவும் லேனாலாக ராஜாத்தியும் நடிக்கவுள்ளனர்.

ஏழு வயதுச் சிறுவன் ஜோதீஸ்வரன் எகிப்திய ராஜகுமாரனின் தோழனாகவும் ஏழுவயதுச் சிறுமி பற்றிமா்தவி ஞானசவுந்தரியின் கோடிப்பெண்ணாக நடிக்கவிருப்பதும் இக்கூத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த ஐந்து கலைஞர்கள் நடிக்கின்றமையும் குறிப்பிடத்தக்க அம்சங்களாகும் மேலும் இக்கூத்தில் நடிப்பவர்களில் பத்துப்பேர் பாடசாலை மாணவ மாணவியர். ஆதலால் எத்தகு சுமைகளும் இடையூறுகளும் இருந்த போதிலும் அடுத்துவரும் தசாப்தங்களில் புதிய தலைமுறையொன்று இந்தக் கூத்து மற்றும் நடைமுறைகளைத் தொடர்ந்து பின்பற்றவும் பேணி வளர்க்கவும் தயாராகி வருவது நம்பிக்கையும் மகிழ்ச்சியும் தரும் ஒரு விடயமாகும்.

நெடுந்தீவு, யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு அப்பால் உள்ள சப்த தீவுகளுள் தொலைவில் உள்ள ஒரு தீவாகும். அங்கு சென்றவர்கள் யாழ்ப்பாண வாழ்வியல் மற்றும் பண்பாட்டு நடைமுறைகளுடன் சில தனித்துவமான பண்புகளையும் இனங்கண்டிருப்பர். இதற்குக் காரணம் நெடுந்தீவின் அமைவிடமும் இயற்கைச் சூழலுமே ஆகும்.

**கலைச்சுடர்**

தமிழர்களுக்கும் தமிழ் மொழிக்கும் தமிழரின் பண்பாடுகளுக்கும் தாயகமாக விளங்கும் தமிழ்நாட்டுக்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கும் இடை நடுவில் நெடுந்திவு. தனித்தமைந்த காரணத்தினால் இராமேஸ்வரம், தனுஷ்கோடி, தொண்டி முதலான தமிழகத்தின் பகுதிகளுடன் நீண்டகாலத் தொடர்புடையதாக விளங்கி வந்திருக்கிறது. மிக அண்மைக்காலம் வரை நெடுந்தீவிலிருந்து பூவும் பாற்பொருள்களும் இராமேஸ்வரத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டமை இதற்குச் சிறந்த

(10 ஆம் பக்கம் பார்க்க)

எழுதியவர்கள்:

**கலாசார உத்தியோகத்தர்கள்**
வலயக் கல்வி அலுவலகம்
தீவகம், வேலணை.

# யாருக்கு நட்டம்?

யாழ். மாவட்டத்தில் நாய்களை அழிக்கும் பணியை பொதுச்சுகாதார பரிசோதகர்கள் தற்காலிகமாக இடைநிறுத்தியுள்ளதாகப் பத்திரிகைச் செய்தியொன்று தெரிவிக்கின்றது. இதற்குக் காரணம் கோண்டாவில் பகுதியில் கட்டாக்காலி நாய்களை நஞ்சூட்டி அழிப்பதில் ஈடுபட்டிருந்த ஒரு சுகாதாரப் பரிசோதகர் மோட்டார் சைக்கிளில் எங்கிருந்தோ வந்த சிலரால் தாக்கப்பட்டதாகும். சுகாதாரப் பரிசோதகரைத் தாக்கும் பொழுது முன்னர் அவர் உணவு கையாளும் நிலையங்களில் பரிசோதனை நடத்துவது பற்றியும் காலாவதியான பழுதடைந்த உணவுப் பொருள்கள், மருந்துகள் முதலியவற்றை அப்புறப்படுத்தியது பற்றியும் பிரஸ்தாபிக்கப் பட்டிருப்பது குறிப்பிடத்தக்க விடயமாகும். இது தற்செயலாக நடந்ததாக இல்லாமல் திட்டமிடப்பட்ட தாக்குதலாகவே தென்படுகிறது.

யாழ்ப்பாணத்தில் சுகாதாரப் பரிசோதகர்களின் பற்றாக் குறையால் சுகாதாரம் பின்தங்கிய நிலைக்குத் தள்ளப்பட்டது. சுகாதாரச் சட்ட விதிகள் செயற்படுத்தப்படாமல் இருந்தன.

அண்மையில் 40சுகாதாரப் பரிசோதகர்கள் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறி உள்ளார்கள். அவர்களின் செயற்பாடுகளுக்கு முட்டுக்கட்டைகள் போடப்பட்டால் அவர்களின் உத்வேகம் குன்றி அவர்களைச் சோர்வடையச் செய்து இறுதியில் சுகாதாரம் சீரழிந்து போகும்.

கடந்த வருடம் யாழ்ப்பாணத்தில் 14பேர் விசர் நாய்களினால் கடியுண்டு இறந்துள்ளார்கள். 9735 பேர் நாய்களினால் கடியுண்டுள்ளார்கள், அவர்களில் 1834 பேர் விசர்நாய்க்கடி தடுப்பூசி போட்டுள்ளார்கள்.

சுகாதாரச் சட்டவிதிகள் அமுல் செய்யப்படுவதனால் தங்கள் வருவாய் குறைக்கப்பட்டவர்கள் ஊழியர்களைத் தாக்கும் செயல்களில் ஈடுபடலாம்.

இந்த நிலையை சீர்செய்ய சமூகம் சுகாதார ஊழியர்களுக்கு உதவவேண்டுமே அன்றி அவர்கள் தாக்கப்படுவதைப் பார்த்துக்கொண்டிருக்கக் கூடாது.

இத்தாக்குதல் சம்பவத்திற்குப் பின்னரே இருபாலையில் 12 வயதுச் சிறுவன் நாயினால் கடியுண்டு இறந்துள்ளான். அத்துடன் கோண்டாவில், கொக்குவில், திருநெல்வேலி பகுதிகளில் பலர் விசர்நாயினால் கடியுண்டு தடுப்பூசி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

எனவே, இதற்கு உடனடியாகத் தீர்வு எடுக்கப்படாவிட்டால் யாழ்ப்பாணத்தில் சுகாதாரச் சீர்கேடுகள் அதிகரிக்க இடமுண்டு. சுகாதாரச் சட்டங்கள் அமுல்படுத்தப்படாவிடில் இறுதியில் பாதிக்கப்படுவது பரிதாபமான பொது மக்களே!

**சமூக நலப் பார்வை - வைத்திய கலாநிதி ந. சிவராஜா**

# வன்னி செல்வதற்கான அனுமதி பெற மிகக் கடுமையான நடைமுறைகள்

வன்னியிலிருந்து வவுனியா வருவது அம்புலிமாமா கதைகளில் வரும் வீரதீரச் செயல் போன்றது என்றால் வவுனியாவிலிருந்து வன்னிக்குச் செல்வதாயின் பஞ்சதந்திரக் கதைகளில் வரும் தந்திரங்கள் எல்லாம் தெரிந்திருக்கவேண்டும். அவ்வளவுக்கவ்வளவு கெடுபிடிகள், விசாரணைகள் எல்லாம் தாண்டி தந்திரங்கள், தில்லு முல்லுகள் எல்லாம் பண்ணினால்தான் வன்னிக்குச் செல்ல முடியும். இல்லாவிட்டால் எங்காவது ஒரு நலன்புரி நிலையத்திலோ அகதி முகாமிலோ லொட்ஜ்களிலோ மாதக் கணக்காகக் காத்துக் கிடக்க வேண்டியதுதான்.

வன்னியிலிருந்து — வவுனியாவுக்கு வந்தால் அவர்கள் திரும்பிச் செல்வதில் சிக்கல்கள் எதுவுமில்லைத்தான் ஆனால் செல்பவர்கள் முன்னரைப்போல் மூட்டை முடிச்சுக்களை காவிச் செல்ல முடியாது. இரு கைகளாலும் தூக்கக்கூடிய அளவுக்கு 2 பைகளை மட்டுமே தூக்கிச் செல்ல முடியும். அவ்வாறு தூக்கிச் செல்லும்போது முக்கித் தக்கித் தூக்குவதைப் படையினர் அவதானித்தால் அவ்வளவுதான் அந்தப் பை உடனேயே திருப்பப்பட்டு விடும்.

வன்னியில் உள்ள மக்களுக்கு தேவையான பொருள்கள் அனைத்தும் லொறிகள் மூலம் அனுப்பப்பட்டு வருகின்றன. மேலதிகமாக மக்கள் எடுத்துச் செல்லும் பொருள்கள் அனைத்தும் புலிகளுக்குப் போய்ச் சேர்கின்றன என்பது படைத்தரப்பு வாதம். ஆனால் லொறிகளில் எடுத்துச் செல்லப்படுவதெல்லாம்

## என்று முடியும் இந்தப் பயண அவலங்கள்?

அரிசி, மா, சீனி போன்ற அத்தியாவசியப் பொருள்கள் தான். ஆனால் இங்கிருந்து மக்களால் எடுத்துச் செல்லப்படுவதெல்லாம் அலங்காரப் பொருள்களும், ஆடம்பரப் பொருள்களும்தான் அவைகள் அங்குள்ள புலிகளுக்குத் தேவைப்படாதவை என்ற வாதத்தை எவரும் ஏற்றுக் கொள்வதாக இல்லை.

அடுத்து வன்னியிலிருந்து விட்டு வந்து வவுனியாவில் தற்போது நிரந்தரமாக வசிப்போரும்சரி, வவுனியாவிற்கு வெளியே உள்ள மாவட்டங்களில் உள்ளோரும் சரி வன்னிக்குச் செல்வதாயின் பாதுகாப்பு அமைச்சின் அனுமதியைப் பெற வேண்டுமென புதிய கட்டுப்பாடு ஒன்று அண்மையில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. இதனால் வன்னிக்கு வெளியே வசிப்போர் வன்னிக்குச் செல்வது முற்றாக ஸ்தம்பித்துப் போய்விட்டதென்றுதான் சொல்லவேண்டும்.

வவுனியாவில் வசிப்போராயின் வவுனியா செயலகத்திற்குச் சென்று பெயரைப் பதிந்து விண்ணப்பப்படிவமொன்றை பெற்றுக்கொள்ள வேண்டும். அந்த விண்ணப்பப்படிவத்தை நிரப்பி, தான் வசிக்கும் பகுதிக்குப் பொறுப்பான கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலுடன் அதனை மீண்டும் வவுனியா செயலகத்தில் ஒப்படைக்கவேண்டும். அந்த விண்ணப்பப்படிவங்கள் வவுனியாவில் உள்ள படை அதிகாரிகளினால் பரிசீலிக்கப்பட்டு விண்ணப்பதாரி எந்தவித பயங்கரவாத நடவடிக்கைகளிலும் சம்பந்தமில்லாதவர், சந்தேகப்படும் படியான ஆளில்லை என்று உறுதி செய்யும் பட்சத்தில் அனுமதி வழங்கப்படும்.

ஆனால் வவுனியாவுக்கு வெளியே உள்ள மாவட்டங்களில் இருந்து வருவோரின் நிலைதான் பரிதாபகரமானது. அவர்கள் வவுனியாவுக்கு வந்து லொட்ஜ்களிலோ, உறவினரின் வீடுகளிலோ தங்கியிருக்கவேண்டும். அங்கிருந்து செயலகத்தில் விண்ணப்பப்படிவம் எடுத்து விண்ணப்பித்தால் — அது கொழும்பிலே உள்ள பாதுகாப்பு அமைச்சிற்கு அனுப்பப்பட்டு அங்கிருந்துதான் அவர்களுக்கான அனுமதி வந்து சேரும். கொழும்பில் அவர்களின் பூர்வாங்கமெல்லாம் அலசப்பட்டு அனுமதி கிடைக்க வாரங்கள், மாதங்களாகலாம். அதுவரை லொட்ஜிலேயும், உறவினர் வீடுகளிலும் தங்கி நின்று அலையோ அலையென்று அலைய வேண்டியதுதான்.

## வவுனியா வலம்
-ரா.இளவரசன்-

இவ்வாறான இழுத்தடிப்புகளின் பின் அனுமதி கிடைத்தால் — அந்த அனுமதியுடன் வவுனியா செயலகத்தில் வன்னிக்குச் செல்வதற்காக பெயரைப் பதிவுசெய்யவேண்டும். பெயர் பதியப்பட்டதும் செயலக அதிகாரிகளால் வர்ண அட்டை ஒன்று வழங்கப்படும். சிவப்பு, பச்சை, நீலம், மஞ்சள் நிறங்களில் இருக்கும் இந்த அட்டைகளைக் கொண்டு குறிப்பிட்ட வர்ண அட்டைக்குரியவர்— எந்தத் தினத்தில் பயணம் செய்யலாம் என்று அறிவிக்கப்படும்.

அவ்வாறான வர்ண அட்டையைப் பெற்றுக் கொண்டவர் வழமையாக செவ்வாய், வெள்ளி ஆகிய நாள்களில் நடைபெறும் மக்கள் போக்குவரத்தில் எந்தத் தினத்தில் பயணம் செய்யலாம் என்பதை அறிந்து கொள்ள முடியும்.

இவ்வாறான பயண தினத்தில் காலை 7 மணிக்கே வவுனியா செயலகத்திற்குச் சென்று கியூவில் காத்திருந்தால், ஏற்கனவே குறிப்பிட்டபடி கைக்கடக்கமான பைகளுடன் அவர் காத்திருக்கும் பட்சத்தில் வவுனியா செயலக வளவில் வைத்து அவர் வாகனத்தில் ஏற்றப்பட்டு படையினரின் பாதுகாப்புடன் பிர

(8 ஆம் பக்கம் பார்க்க)

உதயன் ஞாயிறு சிறப்பம்சம்

- தமிழ்க் கட்சிகளுக்கும் ஜனாதிபதிக்குமிடையே நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது, இனப் பிரச்சினை சம்பந்தமான விஷயங்களில் 75 வீத உடன்பாடு ஏற்பட்டுவிட்டதாக அமைச்சர் பட்டி வீரக்கோன் தெரிவித்துள்ளார்.
- ★ 98 வீதமான உடன்பாடு ஏற்பட்டாலும் கூட, வடக்கு — கிழக்கு இணைப்பு தமிழர்களின் சுய நிர்ணய உரிமை சம்பந்தமாக உடன்பாடு ஏற்படாவிட்டால், இனப்பிரச்சினை தீர்வே தீராது என்கிறார் ஸ்ரீமான் பொதுஜனம்.
- ஜனாதிபதித் தேர்தலில், வவுனியாத் தமிழர்கள் இப்போதைய ஜனாதிபதியை ஆதரிக்காத படியால், தொண்டர் ஆசிரியர்களின் பிரச்சினை சம்பந்தமாக அரசு சாதகமாக நடக்கும் என எதிர்பார்க்க முடியாதாம்!
- ★ தமிழர்கள் ஆதரித்தால் அரசு உதவும்; ஆதரிக்காவிட்டால், உதைக்கும் - என்பதுதான் பாதார்த்தமோ?
- படையிலிருந்து தப்பியோடியவர்களுக்கு மன்னிப்பு வழங்கும் கால எல்லை மேலும் நீடிக்கப்பட்டிருக்கின்றதாம்!
- ★ மன்னிப்பு, மன்னிப் பூ... ஆகிறது!
- புலிகளுடனான பேச்சுவார்த்தையில், இலங்கையின் சார்பில் அமைச்சர் மங்கள சமரவீர, இந்தியாவிலுள்ள இலங்கைத் தூதர் மங்கள முனசிங்க ஆகியோர் முக்கிய இடம் வகிப்பர்!
- ★ மங்களமான முடிவு வருமென்று எதிர்பார்க்கலாமா?

## எதிரொலி..
- இடியன் -

- இலங்கையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறை ஒழிக்கப்பட்டாலும், இப்போதைய ஜனாதிபதி, சந்திரிகா 2006 ஆம் ஆண்டு வரை ஜனாதிபதியாகவே இருப்பாராம்!
- ★ இருக்க... இருக்க... இறுதிவரை இன்பம்!
- அமெரிக்காவில் மாணவர்கள், இளைஞர்களிடையே பரவிவரும் துப்பாக்கிக் கலாசாரத்தை எண்ணிக் கிளின்ரன் உட்படப் பலர் கவலை கொண்டுள்ளனர்!
- ★ பரவி வருவது துப்பாக்கிக் கலாசாரம் அல்ல, துப்பாக்கிக் கொலாச்சாரம்!
- மட்டக்களப்பில் பல பகுதிகளில் மதில்கள், வேலிகள் போன்றவற்றை அகற்றும்படி படையினர் பொதுமக்களுக்குச் சொல்லி வருகின்றனர்!
- ★ தமிழ் மக்களின் 'எல்லை' களை 'இல்லை' யாக்குவதுதான் இதன் அடிப்படை நோக்கமோ?
- திருக்கேதீஸ்வரத்திலிருந்து இராணுவம் விரைவில் அகற்றப்படும் என ஜனாதிபதி உறுதியளித்துள்ளாராம்!
- ★ தமிழ்த் தரப்புக்களுக்கு அளிக்கப்படும் வாக்குறுதிகளைப் பொறுத்தவரை, "விரைவில்" என்பது 'இலாஸ்ரிக்' போன்றது: இரண்டு நாளாகச் சுருங்கலாம் அல்லது இரண்டு வருடங்களாக நீளலாம்!

# ஈழத்தவர் பிரச்சினையை அடக்கியே வாசிக்கின்றனர்

செம்பியன் செல்வனின் தொடக்க உரையுடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. அவர் தனது உரையில் தெரிவித்ததாவது:

நாம் பலவிதமான — அது அரசியலாகவோ, பொருளாதாரமாகவோ, சமூகம் கலைத்துறை சார்ந்ததாகவோ— போராட்டங்களுக்கு முகங் கொடுத்து வருகிறோம் தற்கால சிந்தனைத் தளத்தில் நின்று கொண்டு சவால்களுக்கு முகங்கொடுக்கும் ஒரு மாற்றம் மிக்க கட்டத்தில் நாம் உள்ளோம். இந்தப் பின்னணியில் பழமையில் ஊறித் திளைத்தவரும், போராட்ட காலத்தில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தவருமான சொக்கன் அவர்கள் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொள்கிறார் — என்று குறிப்பிட்டார்.

தென்னிந்தியச் சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொண்டு நாடு திரும்பிய மூத்த எழுத்தாளர் மூதறிஞர் சொக்கன் அவர்களுடனான இலக்கியச் சந்திப்பொன்று கடந்த ஞாயிறன்று யாழ். ஆரியகுளம் சந்தியிலுள்ள தமிழ் எழுத்தாளர் ஒன்றிய மண்டபத்தில் நடைபெற்றது.

மேற்படி ஒன்றியத் தலைவர் செம்பியன் செல்வன் தலைமையில் நடைபெற்ற இச் சந்திப்பில் 'தென்னிந்தியப் பயணம், 'உணர்வும் வியப்பும்' என்ற பொருளில் சொக்கன் தனது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டார்.

அதன் தொகுப்பை இங்கு தருகிறோம்.

சொக்கன் தனது உரையில் தனது பயண நோக்கத்தைத் தெளிவு படுத்தினார்.

"எனது உள்ளத்துக்கும் ஆன்மாவுக்கும் வேண்டிய ஒரு தரிசிப்பாகவே இப் பயணம் அமைந்தது. நீண்ட 70 ஆண்டுகள் வாழ்ந்து, நல்லூர் முருகனையே தரிசித்து வாழும் எனக்கு, எனது வாழ்க்கையுடன் அத்துவிதமாக இருக்கும் மனைவியுடன் சேர்ந்து ஆறுபடை வீடுகளைத் தரிசிக்கும் எண்ணம் இருந்தது. நான் என்னுடைய கையால் சம்பாதித்தே இப்பயணத்தை மேற்கொள்ள வேண்டும் என்றும் எண்ணியிருந்தேன். அந்த எண்ணத்தின் விளைவே இப்பயணமாகும்."

தனது பயணத்தின்போது தனது புலக்காட்சியில் இருந்துதான் அவதானித்த விடயங்களை யாத்திரை நிலையிற் கண்டவை, கலை ரீதியாகக் கண்டவை, மொழி மற்றும் அரசியல்ரீதியாகக் கண்டவை

## தமிழக விஜயம் குறித்த சொக்கனின் அனுபவம்

என்ற வகையினடிப்படையில் கூறுவதாகவும் அவர் குறிப்பிட்டார்.

"தமிழகம் என்ற தாயின் தொப்பூழ்க் கொடியை அறுத்துக் கொண்டு வந்தவர்களே நாங்கள் என்பது எனது நீண்டநாள் கருத்து. வள்ளுவனை, கம்பனை, சங்கப் புலவர்களையெல்லாம் நீக்கி விட்டு எமது இலக்கியங்களைப் பார்ப்பது இயலாது.

"நான் தமிழகக் கோவில்களைப் பார்த்த போது, இந்திய கட்டடக் கலையின் உன்னதத்தை, தனித்துவத்தை வியக்காமல் இருக்க முடியவில்லை. அவைதிக நோக்கில் சமணரின் இருந்துதான் திராவிட கட்டடக் கலை வளர்ந்தது என்று படித்திருக்கிறேன். ஆனால் இராஜராஜ சோழன் கட்டிய தஞ்சைப் பெருங்கோயிலைப் பார்த்து, நான் வியந்தேன். அங்குள்ள கோயில்களின் கோபுரங்களுக்குக் கீழே நிற்கும் போதுதான் மனிதன் எவ்வளவு சிறியவன் என எண்ணத்தோன்றுகிறது. அங்குள்ள ஒரு ஆலயம் இங்குள்ள பத்து ஆலயங்கள் அளவுக்குப் பெரிதானது. மனிதனது எல்லைக்கு அப்பாலான நிலையைக் காணும் போதுதான் விட்டு விடுதலையாகும் நிலை தோன்றும். அத்தகையபிரமிப்பு நிலையை திராவிட கட்டடக் கலை ஏற்படுத்தித் தருகிறது.

"மாமல்லபுரம் கற்சிற்பங்கள் சிற்பக் கலையின் உன்னதத்தைப் பறைசாற்றுகின்றன. கற்கள் பரவிக் கிடக்கும் அம்மலைக்கு நாங்கள் தவழ்ந்து தவழ்ந்தே ஏறிச்

தொகுப்பு:எஸ்.ஸ்ரீகுமரன்
நெடுந்தீவு லக்ஸ்மன்

(8 ஆம் பக்கம் பார்க்க)

# மக்கள் முகம்



யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ்ப்பாணம், நல்லூர் அரசடி வீதி இரண்டாம் ஒழுங்கையைச்சேர்ந்த இரத்தினம் செல்வராசா சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி யாழ். மாவட்ட நீதி மன்றத்தில் நீதிவான் எஸ். ஏ. ச. ஏகநாதன் முன்னிலையில் இவர் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

சமூக சேவையாளரான இவர் யாழ். வாடகைக் கார் சங்கத்தின் தலைவராகவும அரசடி ஜனசக்தி நிலையத்தின் செயலாளராகவும், அரசடி அருள்மிகு செல்லப்பிள்ளையார் ஆலயத்தின் செயலாளராகவும் பணியாற்றி வருகின்றார். (ஐ-15)

★ ★ ★

தீவக கல்வி வலயத்தின் விளையாட்டு அதிகாரியாக நா. லோகநாதன் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் உடற் கல்வி ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தவர் ஆவார். (ஐ-152)

★ ★ ★

சாவகச்சேரி நகரசபைக் கணக்காளராக கந்தையா தம்பிநாதன் கடந்த மாதம் முதலாம் திகதி தொடக்கம் நியமனம் செய்யப்பட்டுள்ளார். (ஐ-31)

★ ★ ★

யாழ். கல்வி வலயத்தில் கணக்காளராகக் கடமை புரியும் தி. சுதந்திரபாலன் 01 - 02 - 2000 முதல் திருகோணமலையில் உள்ள வடக்கு — கிழக்கு மாகாண பொது நிர்வாக அமைச்சினால் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப் பட்டுள்ளார்.

இவரது இடத்துக்கு யாழ்ப்பாண சுகாதார சேவைத் திணைக்களத்தில் சேவை புரியும் கணக்காளர் எஸ். சண்முகரட்ணம் இடமாற்றப்பட்டுள்ளார். யாழ். சுகாதார சேவைத் திணைக்களக் கணக்காளராக யாழ். மாநகர சபையில் கணக்காளராகக் கடமை புரியும் எஸ். தனரஞ்சிதராஜன் பதவியேற்க உள்ளார். யாழ். மாநகரசபை கணக்காளராக வடக்கு — கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சில் கணக்காளராகக் கடமை புரியும் ஆர். துரைசிங்கம் பொறுப்பேற்க உள்ளார். (ஐ-51)

★ ★ ★



சாவகச்சேரி நுணாவில் மத்தியைச் சேர்ந்த சட்டத்தரணி சண்முகலிங்கம் சிவரூபன் 14—02—2000 அன்று வவுனியா மேல் நீதிமன்ற நீதிபதி முன்னிலையில் யாழ்ப்பாண மேல்நீதிமன்ற வலயத்தின் தமிழ் மொழி மூல பிரசித்த நொத்தாரிசாக சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார். கொழும்பு பல்கலைக்கழக சட்டபீடத்திலிருந்து சட்டப் பட்டதாரியாக வெளியேறிய இவர் சாவகச்சேரி இந்துக்கல்லூரியின் பழைய மாணவராவார்.

சத்திய ஆணையாளராகவும் பதிவு செய்யப்பட்ட கம்பனிச் செயலாளராகவும் நியமனம் பெற்றுள்ளதுடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், யாழ்ப்பாண உயர் தொழில் நுட்ப நிறுவனம் என்பவற்றில் பகுதி நேர சட்ட விரிவுரையாளராகக் கடமையாற்றும் இவர் சண்முகலிங்கம் — சிவராணி தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரர் ஆவார், (ஐ)


## மோட்டோ றோலா தொலைபேசி பாவனையாளர்களுக்கான வேண்டுகோள்

மேற்படி தொலைபேசி இணைப்பில் உள்ள சிரமங்கள் யாவும் நீங்கள் அறிந்தவையே. ஆகவே இவ்இணைப்புக்கான மேலதிகமான இணைப்பு வழிகளையுடைய பெட்டியைப் பொருத்தித் தருமாறு கொழும்பில் உள்ள ஜனாதிபதி உட்பட மேலும் பல பெரிய அதிகாரிகளை வற்புறுத்திக் கேட்கும் பொருட்டு கடிதம் ஒன்று தயார் பண்ணி உள்ளோம் இதில் உங்கள் கையொப்பங்கள் முக்கியமானவை. ஆகவே தயவுசெய்து05—03—2000 தொடக்கம் 12—03—2000 வரை உங்கள் தொலைபேசி இலக்கம், பெயர், கையொப்பம் ஆகியவற்றை கீழ்க்காணும் முகவரியில் தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றேன்.

**ஸ்ரீமுருகன் தொலைத் தொடர்பகம்**
நீர்வேலி தெற்கு, கந்தசுவாமி கோயில் வடக்கு வீதி. நீர்வேலி.

(74207)



## கண்ணீர் அஞ்சலி

எமது சோரன்பற்றுக் கிராம உத்தியோகத்தர்
**திரு. சின்னத்தம்பு புவனராசா**
அவர்களின் அன்புத் தகப்பனார்
**வேலுப்பிள்ளை சின்னத்தம்பு**
(ஓய்வு பெற்ற முன்னாள் அதிபர், சோரன் பற்றுக் கணேசா வித்தியாலயம்)

அவர்கள் 29 - 02 - 2000 அன்று காலமானதையிட்டு அன்னாரின் குடும்பத்திற்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சோரன்பற்றுக் கிராம அபிவிருத்திச் சங்கம்.**
பனை. (74205)


# மாணவர் அல்லாதோருக்கும் பயன்படும் அரிய நூல்

புத்தாயிரம் ஆண்டில் உலக மய மாதல் பற்றிய உணர்வு அலைகள் பரவிக் கொண்டிருக்கும் காலகட்டத்தில் குறிப்பாக நிதி உலகமய மாதல் (Globalisation of Fnance) முக்கிய இடத்தை வகிக்கின்றது. பணம் பற்றிய அந்தவகையில் பல நூல்களை வெளியிட்ட ஆசிரியரின் சிறந்த படைப்பாக இந்நூல் வெளியிடப்பட்டிருக்கின்றது. உயர்ந்த வகுப்பில் உள்ள மாணவர்களுக்கும் பல்கலைக் கழக மாணவர்களுக்கும், பணம் பற்றிய சிறந்த

**நூல்: பணம்**
**ஆசிரியர்: வே. கருணாகரன்**

விளக்கங்களும், புதிய பண வடிவங்களும், இலத்திரனியற் பண செயற்பாடுகளும் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டிய தொன்றாகும். இந்த வகையில் மாணவர்கள் அல்லாதவர்களும் பயன்படுத்தி தம்முடைய அறிவை வளர்க்க இந்த நூல் மிகவும் பயனுடையதாக அமையும்.

அறிவு, ஆற்றல் நிறைந்த நிலையில்தான் ஒருவர் நூல்களை வெளியிட முடியும். அறிவைப் பெறுவதற்கும் விருப்பத்துடன் கற்பதற்கும் துணையாக அமையும். புத்தாக்கங்கள் உருவாக்குவதில் வேகமும் நாட்டமும் கொண்டுள்ள ஆசிரியர், அவர் என்னிடம் கல்வி கற்ற காலங்களில் குறிப்பாகப் பொருளியலில் மிகவும் ஆர்வம் கொண்டவராகக் காணப்பட்டார். அந்த வகையில் அவருடைய ஆக்கங்கள் நல்ல பயன் தருமென்பது மட்டுமல்ல இந்தப் பிரதேச கல்வி வளர்ச்சியில் குறிப்பாக பொருளியல் பாடத்துக்கு ஒரு சிறந்த பொருளியல் வளமானவராக இருக்க வேண்டுமென வாழ்த்துகின்றேன்—

**மா. நடராச சுந்தரம்**
(பீடாதிபதி,
வணிக முகாமைத்துவ பீடம்,
யாழ் பல்கலைக்கழகம்)

## புதிய கட்டடம் திறப்பு

இணுவில் சிவகாம சுந்தரி சனசமூக நிலையத்தின் புனரமைக்கப்பட்ட புதிய கட்டடம் நாளை திங்கட்கிழமை பிற்பகல் 12.30 மணிக்கு திறந்து வைக்கப்பட உள்ளது.

## விடுதி அமைப்பு

சுமார் 24 லட்சம் ரூபா செலவில், மந்திகை மருத்துவ மனை வளவில், டாக்டர்களுக்கான விடுதி அமைக்கப்பட்டு வருகிறது.

யாழ் பிராந்தியசுகாதாரத் திணைக்களத்தின் நிதி ஒதுக்கீட்டில் இக்கட்டடம் அமைக்கப்படுகிறது.

இதேவேளை —

வைத்தியசாலையின் பாதுகாப்புக் கருதி சுற்று மதிலும் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ—109)

## ஆய்வுகூட பணியாளர் நியமனம்

நீண்ட காலத்தின் பின்னர், மீண்டும் மந்திகை மருத்துவ மனைக்கு இரு மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்ப வியலாளர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

கொழும்பு சுகாதார அமைச்சினால் இம்மாதம் முதலாம் திகதி முதல் நியமிக்கப்பட்டிருக்கும் இவர்களுள் ஒருவர் பெண் தொழில்நுட்பவியலாளராவார்.

இதேவேளை —

இங்குள்ள பற்சிகிச்சைப் பிரிவுக்கும் மேலும் ஒரு பல் வைத்திய அதிகாரி சுகாதார அமைச்சினால் நியமனம் செய்யப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-109)

# ஈழத்தவர் பிரச்சினையை....

( 7 ஆம் பக்கத் தொடர்)

சென்றோம். அங்குள்ள குடைவரைக் கோவில்கள், ரதங்கள் என்பன சிறப்பாக உள்ளன. கல்லில் செதுக்கப்பட்டுள்ள யானை துல்லியமான சமச்சீர்த் தன்மை கொண்டிருந்தது. மலையைக் குடைந்து சிற்பங்களைச் செய்துள்ள முறை பிரமிப்பைத் தருகிறது. கீழே — கடற்கரையில் நின்று பார்க்கும்போது, மனம் எங்கோ உயரத்துக்குச் சென்று வருகிறது போலுள்ளது. இராட்சதத் தன்மையில் சிந்தித்து, சிற்பி இவற்றைச் சிறிய வடிவங்களுக்குள் அமைத்துள்ளார் என்பது புலனாகிறது.

''மழைத்துளிகளை நம்பி வாழும் சக்கரவாகப் பறவைகள் போல வெளிநாடுகளில் இருந்து பிள்ளைகளோ உறவினர்களோ அனுப்பும் பணத்தை எதிர்பார்த்து அதற்குள்ளேயே தமது செலவுகளைச் சுருக்கிப் பல்வேறு மனச் சங்கடங்களுடன் வாழும் ஈழத் தமிழர்கள் பலரின் சோகக் கதைகளும் தமிழகத்தில் உள்ளன. உதாரணத்திற்கு ஒன்று.''

நான்குபேர் கொண்ட குடும்பம். 73 வயதான குடும்பத்தலைவர். 60 வயதான அவரது மனைவி. 32 வயதான மகள். இவர்களுடன் ஒன்றுவிட்ட சகோதரியொருவர். இவருடைய சம்பாத்தியம் வீட்டுத் தேவைக்கே போதாது. கனடாவில் உள்ள மகன் எப்போதாவது அனுப்பும் பணத்தை எதிர்பார்த்து அதற்குள் தேவைகளைச் சுருக்கி வாழவேண்டிய நிலை. அவர் Hindu பத்திரிகை வாசிப்பார். அனேகமாகச் சீறிச் சினந்தபடி இருப்பார்.

''யாழ்ப்பாணத்தில் வீடு வளவு உள்ளது. வசதியாக வாழலாம் வாடகையெல்லாம் கொடுத்துத் தமிழகத்தில் வாழ வருமானம் போதாது. எனவே மனத் தடைகளும் சங்கடங்களுமாக வாழ்க்கை கழிகிறது. எல்லோருக்கும் யாழ்ப்பாணம் வர விருப்பம்; மனைவியைத் தவிர. இந்திய அமைதிப் படை காலத்தில் பட்ட அவலங்கள் மனைவிக்கு இங்கு வர விருப்பமற்ற தன்மையை ஏற்படுத்தி உள்ளன. இவ்வாறு தமிழகத்தில் சிக்கிச் சீரழியும் நிலையில் பரிதாபகரமான பல குடும்பங்கள் உள்ளன.''

''தமிழகத்தில் எல்லாம் ஆங்கில மயம்தான். அதிலும் உச்சரிப்பு வேறுபாடுகள் அண்ணா நகரில் ஓர் இடத்துக்குச் செல்ல நேர்ந்தது. H என்பது அவர்களுக்கு விளங்கவில்லை. 'ஹெச்' என்றாலே அவர்களுக்குப் புரியும். இதனால் நீண்ட தூரம் அலைய நேர்ந்த அனுபவமும் ஏற்பட்டது. தமிழ் கூட பிழையாக எழுதப்படுவதும் உள்ளது. திருச்செந்தூரில் 'கடற்கறை' என்று எழுதிய பெயர்ப்பலகை தொங்குகிறது. இத்தகைய பிழைகள் அனேகமாக உள்ளன. இலங்கைத் தமிழர்களின் மனோபாவம் மாறவில்லை என்றும் சொக்கன் குறிப்பிட்டார்.

''தமிழக மக்கள் பேசிய முறையும் இனிமையாக வெளிக்காட்டிய நடத்தையும் எனக்குப் பிடித்திருந்தன.'' அந்த மனித மனங்களை நாங்கள் கசக்குகிறோமா என எண்ணத்தோன்றுகிறது. அங்குள்ள மக்களைக் குறை கூறுவதிலும் நையாண்டி செய்வதிலும் முகத்துக்கு நேரே ஏசுவதிலும் நம்மவர்கள் ஈடுபட்டிருந்தனர். மலையகத் தமிழர்களை நோக்கிய மனோபாவத்திலேயே பலரும் இந்தியத் தமிழர்களையும் நோக்குகின்றனர். ஒண்டியாய் — அடைக்கலந் தேடிப் போன இடத்திலும் அதிகாரம் பண்ணும் தன்மையே இருப்பதை நான் கவலையுடன் நோக்கினேன்''

''இங்கிருந்து சென்ற ஈழவேந்தன் அங்கு ரீயூசன் சொல்லிக் கொடுத்து வாழ்ந்து வருகிறார். ஈழத்தமிழர்களின் இன்னல்களை, பெருமைகளை, பிரச்சினைகளைத் தமிழகத்தில் எடுத்து விளக்கும் பணியில் தன்னை ஈடுபடுத்தியுள்ளார். அவர் பத்திரிகைகளில் இது பற்றி எழுதுகிறார். கூட்டங்களில் அழையா விருந்தாளிபாகக் கலந்துகொண்டு, ஈழத்தைப் பற்றிய கருத்துக்களைப் பேசி வருகிறார். இங்கிருந்து வருபவர்களைக் கொண்டு பேசுவித்தும் வருகிறார் என்னையும் கூட இங்குள்ள பிரச்சினைகளை எடுத்துக் கூறுமாறு கேட்டார். மானம், அவமானத்தைப் பொருட்படுத்தாமல் அவர் இப்பணியைச் செய்துவருகிறார்.

''பொதுவாகவே தமிழகத்தவர்கள்– குறிப்பாக தமிழகத் தலைவர்கள் ஈழத்தவர் பிரச்சினைகளை அடக்கியே வாசிக்கின்றனர். என்னை ஈழவேந்தன் ஓர் அரசியற் தலைவரிடம் கூட்டிச் சென்றார். அவருடன் கதைத்த போது, அவர் இங்குள்ள பிரச்சினைகள் குறித்து பெரிதும் அக்கறை கொள்ளவில்லை என்பது புலனாகியது'' என்றும் அவர் குறிப்பிட்டார்.

''உலகத் தமிழாராய்ச்சி நிறுவனப் பேராசிரியை விஜயலட்சுமியையும் நான் சந்தித்தேன். யாழ். பல்கலைக்கழக பட்ட ஆய்வுகள் மிகவும் உயர்ந்த தரத்தில் இருப்பதாக அவர் என்னிடம் தெரிவித்தார். தமிழகத்தின் கணிசமான எழுத்தாளர்கள் தொலைக்காட்சிகளுக்கு எபிசோட்(EPISODE)கள்எழுதுவதிலேயேஈடுபட்டுள்ளனர். அதனால் நிறைய வருமானமும் கிடைக்கிறது. எனவே, அவர்களைச் சந்திப்பதற்கு வாய்ப்புக் கிடைக்கவில்லை'' என்றும் தெரிவித்தார். ★

## வன்னி ........

(7 ஆம் பக்கத் தொடர்)

மனாளங்குளம் வரை அழைத்துச் செல்லப்பட்டு வன்னிக்கு அனுப்பி வைக்கப்படுவார்.

இவ்வாறான சிக்கல்களுக்கு முகம் கொடுக்கத் தயங்கிய பலர் தமது வன்னிக்கான பயணத் திட்டங்களையே கைவிட்டுவிட்டனர். ஏனென்றால் வன்னிக்குப் போய்வரும் சிரமம் ஒருபுறமிருக்க— பாதுகாப்பு அமைச்சின் அனுமதிக்காக விண்ணப்பிக்கும் தென் பகுதியில் உள்ள பலரின் பெயர்கள் படையினரின் கவனிப்புக்கு ஆளாகும் நிலையும் ஏற்பட்டு வருகிறதாம். வன்னிக்குச் சென்று வந்தவர் என்ற ரீதியில் அவர் படையினரின் விசாரணைகளுக்கு உள்ளாக வேண்டிய நிலையும் ஏற்பட்டிருக்கிறதாம்.

இது இவ் வாறிருக்க வன்னியிலே தமது உறவினர் ஒருவர் இறந்து போனாலோ அல்லது கடும் சுகவீனமுற்று இருந்தாலோ அவரைப் பார்க்கப் போவதற்குச் சிலர் படும்பாடு பெரும் பாடாக இருக்கிறது.

ஏற்கனவேபடையினரின்கட்டுப்பாட்டிலுள்ள யாழ்ப்பாணத்துக்கு விமானம் மூலம் செல்வதற்குப் பெறவேண்டியுள்ள பாதுகாப்பு அனுமதியைப் போன்றே—தற்போது அமுலுக்கு வந்திருக்கும் வன்னிக்கான பயணத்துக்கு அனுமதி பெறும் நடைமுறையும் அமைந்திருப்பதால் காலப் போக்கில் அதனைப்போலவே இதுவும் லஞ்சம் கொழிக்கும் ஒருநடைமுறையாக மாறிவிடலாம் என்பதில் சந்தேகமில்லை. ★

மீன்பிடியியல் நெறியைப் பூர்த்திசெய்வோருக்கு

# கடற்றொழில் சார்ந்த துறைகளில் வேலை வாய்ப்பு வழங்கவேண்டும்

யாழ்ப்பாணம், மார்ச் 5

யாழ். பல்கலைக்கழக கடல்வள அபிவிருத்தி நிலையத்தினால் நடத்தப்படும் மீன்பிடியியல் கற்கை நெறியைப் பூர்த்தி செய்யும் மாணவர்களுக்குகடற்றொழில் சார்ந்த துறைகளில் வேலை வாய்ப்புகள் வழங்கப்படவேண்டும்.

இவ்வாறு கோரும் மகஜரொன்று வடக்கு — கிழக்கு மாகாண ஆளுநர், மாகாண கல்வியமைச்சின் செயலாளர் கடற்றொழில்அமைச்சுச்செயலாளர் உட்படப் பலருக்கு யாழ். பல்கலைக்கழகத்தினால் அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டது.

யாழ். பல்கலைக்கழகத்தினால் 99 ஆம் ஆண்டு ஓகஸ்டில் ஆரம்பிக்கப்பட்ட மீன்பிடியியல் கற்கை நெறியில் 50 மாணவர்கள் கல்வி கற்றுவருகின்றனர்.

இவர்கள் ஓகஸ்ட் 2000 ஆம் ஆண்டில் தமது பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்யவுள்ளனர்.

கற்கை நெறியில் பங்கு பற்றிய மாணவர்கள் மீன்பிடித்துறை சார்ந்த மத்திய தர நிர்வாகத்தில் கடமையாற்றக்கூடிய தகுதியைப் பெறுகின்றனர்.

கடற்றொழில் பரிசோதகர் உட்பட மீன்பிடித்துறையுடன் சம்பந்தப்பட்ட பதவிகளுக்கு இந்தக் கற்கை நெறியையும் மேலதிக தகைமையாகக்கொண்டு இவர்களுக்கு வேலை வாய்ப்பு வழங்குவதில் முன்னுரிமை வழங்கப்படவேண்டும்.

கரையோரப் பகுதியிலுள்ள மாணவர்களும் பெற்றோர்களும் கடற்றொழில் தொடர்பான பாடங்களைக் கற்பதில் ஆர்வமாகவுள்ளனர்.

மரவேலை, இசை, நடனம், மனையியல். விவசாயம் போன்ற துறைகளுக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்பட்டுள்ளது போல் மீன் பிடியியல் பாடத்தையும் பாடசாலைகளில் ஆரம்பித்து இதனைக் கற்பிப்பதற்கு மீன்பிடியியல் கற்கை நெறியினைப் பூர்த்தி செய்தவர்களுக்குமுன்னுரிமை வழங்குமாறும் வேண்டுகின்றோம்.

இப்படி அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-5-10)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்வு 17 — 11 — 1948

உதிர்வு 05 — 03 — 1998

### திருமதி செல்வகுமாரி பாலசேகரம்

(செல்வி)

உயிர் உள்ளவரை உறங்காதம்மா
உங்கள் உறவால் உருகும் உள்ளங்கள்.
கடவுளைக் கையெடுப்போம் நித்தம்
உங்கள் ஆத்ம சாந்திக்காக.

கா. பாலசேகரம்,
பா. ராஜினி, பா. சதீஷ்.

82/3, நல்லூர் குறுக்கு வீதி,
யாழ்ப்பாணம்.

(74168)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் கனகசபை திரவியம்

(செயலாளர், வலி.மேற்கு பிரதேச சபை)

மண்ணில் 07 — 08 —1948

விண்ணில் 15 — 02 — 1999

திதி: 05 — 03 — 2000

நீங்கள் எம்மை விட்டு மறைந்து ஓராண்டு போனாலும் உங்கள் நினைவுகள் எம்மை விட்டு என்றும் அகலாது.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயரும்.
மனைவி, பிள்ளைகள்.

திரவியம் வீதி,
சங்கானை.

(74169)

## ஐ. நா. தூதரகம் நிதி உதவி

நவாலி, மார்ச் 5

கட்டுடை சேலன்காமம் முகாமில் தங்கியிருக்கும் கீரிமலை, வசந்தபுரம் பகுதிகளைச் சேர்ந்த 20 குடும்பங்களுக்கு அவர்களின் முகாமைத் திருத்தி அமைப்பதற்கென அகதிகளுக்கான ஐ. ந . தூதரகம் 25 ஆயிரம் ரூபாவினை வழங்க முன்வந்துள்ளது.

இதன் முதல் கட்டமாக 10 ஆயிரம் ரூபா இவர்களது பெயரில் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளது. (ஐ 100)

## ஓய்வூதியர் ஏமாற்றம்

தென்மராட்சி, மார்ச் 5

யாழ். மாவட்ட உள்ளூராட்சி ஓய்வூதியர்களின் பெப்ரவரி மாத ஓய்வூதிய வவுச்சர்கள் கொழும்பிலிருந்து வந்துள்ளபோதிலும் இவற்றுக்குரிய காசோலைகளும் பட்டியல்களும் வங்கிகளுக்கு வராததால் ஓய்வூதியம் பெறுவதற்காகக் கடந்த திங்களன்று சென்ற ஓய்வூதியர்கள் ஏமாற்றத்துடன் திரும்பினர். (ஐ-117)

## இந்து நெறி வெளியீட்டு விழா

கொழும்புத்துறை, மார்ச் 5

யாழ்.பல்கலைக்கழக இந்து மன்றத்தின் ' இந்து நெறி'' வெள்ளி விழாச் சிறப்பு மலர் வெளியீட்டு விழா கடந்த 22 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை மாலை நூலகக் கேட்போர் கூட மண்டபத்தில் இந்து மன்றத் தலைவர் இரா - அகிலன் தலைமையில் நடைபெற்றது.

வரவேற்புரையை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடபிரதிநிதி சி.சிவகுமாரும் ஆசியுரையை யாழ்.பல்கலைக்கழக இந்து மன்றப் பெரும் தலைவர் பேராசிரியர் ப. கோபாலகிருஷ்ண ஐயரும் வாழ்த்துரையை யாழ். பல்கலைக்கழகக் கலைப்பீடாதிபதி பேராசிரியர் எஸ். பாலச்சந்திரனும் நூல் அறிமுக உரையை யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் இ. குமாரவடிவேலும் நூல் வெளியீட்டுரையை யாழ். பல்கலைக்கழகத்துணை வேந்தர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம் பிள்ளையும் நூல் பற்றிய ஆய்வுரையை யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைப் பேராசிரியர் நா. சுப்பிரமணியனும் நிகழ்த்தினர்.

(ஐ-30)

## 'யுனெஸ்கோ' இலக்கியப்போட்டி மாவட்ட மட்ட முடிவுகள்

யாழ்ப்பாணம், மார்ச் 5

'யுனெஸ்கோ' நிகழ்ச்சித் திட்டத்தின் அனுசரணையுடனான இரண்டாம் கட்ட இலக்கியப் போட்டியின் மாவட்ட மட்டப் போட்டிகள் கடந்த மாதம் 26 ஆம் திகதி யாழ். மத்திய கல்லூரியில் நடைபெற்றன.

குடாநாட்டின் ஐந்து கல்வி வலயங்கள் ரீதியாக நடைபெற்ற போட்டிகளில் முதலிடங்களைப் பெற்ற மாணவர்களும்குழுக்களும் மாவட்ட மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டனர்.

மேற்படி போட்டிகளில் கலந்து கொண்டு முதல் மூன்று இடங்களைப் பெற்ற மாணவர்களதும் குழுக்களினதும் விவரங்கள் வருமாறு:

**கட்டுரை**

★ முதலாம் இடம்—பு. நவஜீவா (மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயம் ).

★ இரண்டாம் இடம்— ச. சுகன்யா (சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி).

★ மூன்றாம் இடம் — க. தர்சனன் (யாழ். இந்துக் கல்லூரி).

**கவிதை**

★ முதலாம் இடம்—ச. சர்மிளா (யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி).

★ இரண்டாம் இடம் — ச. சிந்துஜா (பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலை).

★ மூன்றாம் இடம்— யோ. தேவகி (விடத்தல் பளை கமலாசினி வித்தியாலயம்).

**சித்திரம்**

★ முதலாம் இடம்— அ. மனோகரன் (மானிப்பாய் மெமோறியல் கல்லூரி).

★ இரண்டாம் இடம் — இ. பிரதாபன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி).

★ மூன்றாம் இடம்— கி. சிற்பரன் (யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி).

**நாடகம்**

★ முதலாம் இடம் — மானிப்பாய் மெமோறியல் கல்லூரி.

★ இரண்டாம் இடம் — அல்லாரை அ. த. க. பாடசாலை.

★ மூன்றாம் இடம்—யாழ். வேம்படி மகளிர் கல்லூரி.

**நடனம்**

★ முதலாம் இடம்—சாவகச்சேரி மகளிர் கல்லூரி.

★ இரண்டாம் இடம்— சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி.

மூன்றாம் இடம்—கரம்பன் சிறிய புஷ்பம் மகளிர் வித்தியாலயம்.

இவர்களுக்கான பரிசில்கள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கும் நிகழ்ச்சி குறித்துப் பின்னர் அறிவிக்கப்படும் என 'யுனெஸ்கோ' மாவட்ட இணைப்பாளர் என். சண்முகநாதபிள்ளை தெரிவித்தார். (ஐ-10)


## முறைசாராக் கல்வி யா/இணுவில் இந்துக் கல்லூரி

பயிற்சிநெறி - உடையமைத்தல் (தையல்)
கட்டணம் - இலவசம்
சேரவிரும்புபவர்கள் உடன் தொடர்பு கொள்ளவும்.

(74186) — அதிபர்



## விமானப் பயணச் சீட்டுகள்

உலகில் எப்பாகத்துக்கும் அனுபவமும் நிபுணத்துவமும் உள்ள பிரயாண முகவர்கள் மூலம் மலிவான விலையில் விமானப் பயணச் சீட்டுகளுக்குத் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:

Mrs. K. Sivalingam,
31B, Sea Avenue,.
Colombo- 3,
Tel. 565768

(74057)


## 30 ஆம் நாள் நினைவஞ்சலி



பிறப்பு: 02 — 12 — 1924

இறப்பு: 05 — 02 — 2000

### அமரர் செல்லர் குலசேகரசிங்கம்

(சின்னமோனை)

எமது குடும்பத் தலைவர் செல்லர் குலசேகரசிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்தியம் இன்று (05-03-2000) ஞாயிற்றுக்கிழமை எமது இல்லத்தில் நடைபெற இருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் கலந்து சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

97, பொற்பதி வீதி,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(74157)

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

2 ஆட்டுக்கடா, பால் ஆடு ஒன்று (நல்ல இனம்) விற்பனைக்குண்டு. 108, அரசடி றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். (74199)

புதிய MD 90 மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. சனி, ஞாயிறு தினங்களில் பார்வையிடலாம். தொடர்பு: இல. 10/02, சிவன் அம்மன் கோயில் வீதி, கந்தர்மடம். (74140)

ரொயோட்டா ஹைஏஸ் 40 சிறி, 4456 டீசல் வான் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ச. செந்தூரன் இல.4, மேதர் லேன், மானிப்பாய். (செல்லமுத்து விளையாட்டு அரங்கு அருகில்) தொலைபேசி இல.021-3470 (74102)

பலவர்ண முயல்கள் மொஸ் கோவித்தாரா, சிறந்த இன சிலுக்கி கோழிகள், பால் மாடு கன்றுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: பலோந்திரகுமார் ஜெயந்தன் அராலி வடக்கு. (74171)

வட்டுக்கோட்டை, சங்கரத்தை செல்லத்துரை வீதியில் அமைந்துள்ள இரு பெரிய வீடுகள் ஒன்று 8 பரப்பு மற்றையது 5 பரப்பு கொண்டது. உடன் விற்பனைக்கு. மேலதிக விவரங்களுக்கு: ராஜரெத்தினம் நாகேஸ்வரி செல்லத்துரை வீதி, சங்கரத்தை வட்டுக்கோட்டை அல்லது S.ராசேந்திரம் பாம் ஸ்கூல் முன்பாக, திருநெல்வேலி, யாழ்ப்பாணம். (74143)

9 மாதம் நிரம்பிய பெண் டோமன் நாயும், பெண் டாசோன் நாயும் விற்பனைக்குண்டு. தொடர்பு: R. பேபி சங்கரப்பிள்ளை வீதி, மானிப்பாய் தெற்கு, மானிப்பாய். (74178)

கந்தரோடை, கந்தையா உபாத்தியாயர் வீதியில் நாகதம்பிரான் மில்லுக்கு அருகாக பயன்தரு மரங்களுடன் கூடிய நான்கு பரப்புக் காணி (கிணற்றுடன்) விற்பனைக்குண்டு. சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் மாத்திரம் தொடர்பு கொள்ளவும். தொடர்பு: 166/1, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (74190)

### வீடு விற்பனைக்கு

இல. 236, கஸ்டி வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள சகல வசதிகளையும் உள்ளடக்கிய கச்சேரி, பாடசாலைகள் அண்மித்த பகுதியிலுள்ள பயன்பல கொண்டதுமான $1\frac{1}{4}$ பரப்புடன் கூடிய வீடு விற்பனைக்கு உண்டு. விரைவில் நீங்கள் தொடர்பு கொள்ள மேற்கூறிய முகவரியை நாடவும். (74202)

### மணமகன் தேவை

றோமன் கத்தோலிக்க கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 30 வயது நிரம்பிய, யாழ். நகரில் சொந்தமாக வீடுமுள்ள பயிற்றப்பட்ட விஞ்ஞான ஆசிரியைக்குத் தகுந்த மணமகன் தேவை. கத்தோலிக்கரல்லாதோரும் விண்ணப்பிக்கலாம். தொடர்புகளுக்கு: விள. இல. 1011, மே/பா, உதயன் பணிமனை, யாழ்ப்பாணம். (74151)

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 28 வயது சுவாதி நட்சத்திர மணமகளுக்கு மணமகன் தேவை. டாக்டர், எஞ்ஜினியர் B.Sc. தரத்தில் இருக்க வேண்டும். தகுந்த சீதனம் வழங்கப்படும். தொடர்பு: 39, கே.கே எஸ். வீதி, பூநாறி மரத்தடி, கொக்குவில். (74174)

### தவறிவிட்டது

யோசேப்பு பிலோமினா என்பவருடைய தேசிய அ. அட்டை (இல.52592918V), விசேட அ. அ. பேஸாடன் இராசாவின்தோட்டத்துக்கும் கொழும்புத்துறைக்கும் இடையில் தொலைந்து விட்டன. கண்டெடுத்தவர்கள் E. பெனடிக்ற் 54/11, சுவாமியார் வீதி, கொழும்புத் துறையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (74193)

ஆனைக்கோட்டையைச் சேர்ந்த சிவராசா சிறிகாந்தா என்பவரது தேசிய அ. அட்டை (773213550V), விசேட அ. அட்டை (0905017400) மாதகலுக்கும் பண்டத்தரிப்புக்கும் இடையில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் சோமசுந்தரம் வீதி, ஆனைக்கோட்டை என்னும் முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (74201)

கப்பல் பயணத்தில் K K.S. இல் இருந்து யாழ். மத்திய பஸ் நிலையத்திற்கு 1-3-2000 அன்று கொண்டு வரப்பட்ட பொருள்களில் சொருபங்கள் உட்பட கோயில் பொருள்கள், உடுப்புகள் அடங்கிய பொதி தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் 12/8, மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் வசிக்கும் A, சீலனிடம் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன். (74152)

9 ஆம் வட்டாரம் புங்குடுதீவைச் சேர்ந்த கந்தையா பூபாலசிங்கம் என்பவரது பாஸ்போட், இலங்கை வங்கிக்கு உரித்தான சேமிப்புக் கணக்குப் புத்தகம் என்பன 24-02-2000 அன்று யாழ்ப்பாணத்தில் தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஆதவன், இல. 328, ஆஸ்பத்திரி வீதி, (சந்தை முன்பாக), யாழ்ப்பாணம் எனும் முகவரியில் ஒப்படைத்து உதவவும். சன்மானமாகரூபா500 வழங்கப்படும். (74145)

### இறைச்சிக் கோழி

இறைச்சிக்கோழி புறோயிலர் விற்பனைக்கு உண்டு. தினமும் சுத்தம் செய்து கொடுக்கப்படும். தொடர்பு இல. 40, கோயில் வீதி, யாழ்ப்பாணம். (74118)

### அபூர்வ ஜோதிடம்

தொல்லை தரும் நோய் நீக்கம், மகிழ்ச்சி பெருகும் திருமணவாழ்வு, அதிர்ஷ்டத்தை நோக்கிய தொழில். UP 304, ஆலடிச்சந்தி, பலாலி வீதி, கந்தர்மடம். (74160)

### பூனைக் குட்டிகள்

நல்ல இன பூனைக்குட்டிகள் இலவசம் தொடர்பு: சி. சுரேந்திரன் 200, கஸ்தூரியார் வீதி, யாழ் இந்துக் கல்லூரி மைதானத்திற்கு முன்பாக. (74173)

### கண்டெடுக்கப்பட்டது

கடந்த 28-02-2000 அன்று யாழ். நகரப் பகுதியில் 'பென்ரன்' ஒன்று கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் தகுந்த ஆதாரம் காட்டி யாழ். ஸ்ரேசன் வீதியில் உள்ள J/74 கிராம அலுவலர் பணிமனையில் பெற்றுக் கொள்ளவும். (74162)

### திருத்த வேலைக்கு

சகலவித கமராவகைகளும் எலக்ரோனிக் பிளாஷ் கண், மூக்குக் கண்ணாடி ஒட்டுதல், புகைப்படத் துறைசார்ந்த ஏனைய துணைக் கருவிகளும் திருத்திக் கொடுக்கப்படும். சு.நாராயணசாமி, இல.301, கஸ்தூரியார் வீதி, மேல்மாடி. (கன்னாதிட்டிச்சந்திக்கு அருகில்) (74191)

### ஆங்கிலம் விசேடமாக

O/L, A/L Credits, Distinction பெறுபேறடையவும். G. A. Q. பட்டப்படிப்பு. (Spoken English உட்பட) கற்பிக்கப்படும். ஆசிரியர்: B. Sc. [Cey] London, Inter 85, சிவன் கோயிலடி. சிவன் கோயில் பின்புறம், திருநெல்வேலி. (74179)

### மணமகள் தேவை

இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த மெக்கானிக் மணமகனுக்கு தகுதியுடைய பெண் தேவை. தொடர்பு: மோகனராணி திருமண சேவை, இல. 1051, கே. கே. எஸ். வீதி, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (74180)

### மணமக்கள் தேவை

யாழ். இந்து உயர் குடும்பத்தைச் சேர்ந்த 40 வயது செவ்வாய் தோசமற்ற தொழில் நுட்பக்கல்லூரி போதனாசிரியருக்கும், 28 வயது செவ்வாய் தோசமற்ற பட்டதாரிச் சகோதரிக்கும் பெற்றோர் தகுந்த மணமக்களைத் தேடுகின்றனர். முகவரி: கே. கமலா, C/o திருமதி சு. விஜயகுமார், அரசடி ஒழுங்கை, புலோலி கிழக்கு பருத்தித்துறை. (73999)

### கோழிகள்விற்பனைக்கு

புறொயிலர், இறைச்சிக் கோழி, கல்பேட்டும் விற்பனைக்கு உண்டு. மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம். தொடர்புகளுக்கு: லக்கி மத வடி ஒழுங்கை, திருநெல்வேலி. (74204)

## வீதிஅபிவிருத்தி திணைக்களத்தின் பிரதேச அலுவலகம் மந்திகையில்

வடமராட்சி, மார்ச் 5

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் வடமராட்சிப் பிரதேச அலுவலகம் மந்திகையில் நிறுவப்பட்டு வருகிறது.

மந்திகையில் உள்ள புலோலி சமநலகேந்திர நிலையத்துக்கு அருகில் உள்ள அரச காணியில் இதற்கென இடம் ஒதுக்கப்பட்டு சுமார் இரண்டு லட்சம் ரூபா செலவில் சீமெந்து தூண்களுடன் முட்கம்பி வேலி இடப்பட்டு தற்காலிக கொட்டகை ஒன்றும் அமைக்கப்பட்டு வருகிறது.

முதலில் தார் பீப்பாக்களைக் களஞ்சியப் படுத்தவும் வாகனங்களை நிறுத்தவும் வசதி செய்யப்படும். அதனைத் தொடர்ந்து இங்கு அலுவலகக் கட்டடம் ஒன்று அமைக்கப்படும்.

தற்போது இத்திணைக்களத்தின் பிரதேச அலுவலகம் நெல்லியடியிலும் களஞ்சியம் புலோலி சாரையடியிலும் இயங்கி வருகின்றன. (ஐ - 173)

## புவியியல் கலாநிதி

யாழ். பல்கலைக்கழக புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எஸ். ரி. பி. இராஜேஸ்வரன் புவியியல் துறையில் கலாநிதிப் பட்டம் பெற்றுள்ளார்.

யாழ்ப்பாணக் குடா நாட்டினதும் தீவகத்தினதும் உருவவியல் அம்சங்களை விமான ஒளிப்படங்களை அடிப்படையாகக் கொண்டு இவர் மேற்கொண்டிருந்த ஆய்வுக்காகவே இவருக்கு யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் கலாநிதிப் பட்டம் வழங்கி உள்ளது. சென்ற வருடம் ஜூன் மாதத்தில் இருந்து அவர் இந்தத் தகுதியினைப் பெறுகிறார். (அ-5)

## மாதகல் பாணாவெட்டியில்

# ஆலயச் சூழலில் உள்ள மிதி வெடிகளை அகற்றுக!

## பிரதேச செயலரிடம் கோரிக்கை

மாதகல் பாணாவெட்டி ஸ்ரீ புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி வருடாந்த மஹோற்சவம் ஆரம்பமாக இருப்பதால் ஆலயத்தின் தெற்குப் புறத்தில் புதைக்கப்பட்டிருக்கும் மிதிவெடிகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்று வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆலய இந்துதர்ம பரிபாலனசபை சண்டிலிப்பாய்ப் பிரதேச செயலருக்கு மாதகல் கிழக்கு கிராம அலுவலரின் சிபார்சுடன் கடந்த வாரம் அனுப்பி வைத்துள்ள மகஜர் ஒன்றில் இவ்வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

ஆலய சப்பறத் திருவிழா, தேர்த்திருவிழா ஆகியவற்றின்போது வடம் பிடிப்போர் மிதிவெடிகள் புதைக்கப்பட்டிருப்பதாகச் சந்தேகிக்கப்படும் வயற்காணிகளுக்கு ஊடாகச்சென்று வரவேண்டியுள்ளது. ஆகவே கூடியவிரைவில் இந்தமிதிவெடிகளைச்சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு அகற்றித் தருமாறு வேண்டுகின்றோம் — என்று மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை —

மாதகல் தெற்கு விவசாய சம்மேளனமும் மேற்படி வயல் பகுதியிலுள்ள மிதிவெடிகளை அகற்றித்தருமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளைக் கடித மூலமும் நேரில் சந்தித்தும் ஏற்கனவே வேண்டுகோள் விடுத்திருந்ததும் குறிப்பிடத்தக்கது. இப்பகுதியில் மிதி வெடிகளில் சிக்கி மேய்ச்சலுக்கு வந்த மாடுகள் பல காயமடைந்தும் இறந்தும் உள்ளன. (ஐ-135)

## பாரம்பரிய கூத்துக்களை....

(6 ஆம் பக்கத் தொடர்)

எடுத்துக்காட்டாகும். பசுத்தீவு என்றும் பாற்தீவு என்றும் போற்றத்தக்க சிறப்புடன் இருந்த அத்தீவு அந்நியர் வரவின் பின் படிப்படியாக நிகழ்ந்த பல்வேறு மாற்றங்களைத் தொடர்ந்து இன்றைய நிலையை எட்டியுள்ளது. அன்றாட வாழ்க்கைக்கு அல்லாடும் இன்றைய சூழ்நிலையில் இன்று ஞானசவுந்தரி இசை நாடகம் அரங்கேற்றப்படுவது பாராட்டத்தக்க முயற்சிதான்.

நவநாகரிகமும் அதனோடு தொடர்புபட்ட பண்பாட்டு மற்றும் பொழுது போக்கு அம்சங்களும் கால் கொள்ளாத கால சமுதாயத்தில் மிக்க செல்வாக்கைப் பெற்றிருந்தவை தென்மோடி மற்றும் வடமோடிக் கூத்துக்களே. இந்த வகையில் நெடுந்தீவு தனித்துவமானதொருகூத்துக் களமாக விளங்கி வந்துள்ளது என்பதற்கு அங்கு நடிக்கப்பட்டு வந்த ஞானசவுந்தரி, கிறிஸ்தோபர், எல்லாம் யேசுவே, யுவானியார், தேவசகாயம்பிள்ளை, பொன்னிச் செபமாலை, தொம்மையப்பர், மரியசீலன், ஊசோன் பாலந்தை, இம்மானுவேல், விஜயமனோகரன் முதலான கத்தோலிக்க, கிறிஸ்தவக் கூத்துக்களையும் கோவலன் கண்ணகி, காத்தவராயன், வள்ளி திருமணம், பட்டணத்துப் பிள்ளையார், நல்லதங்காள், முத்துமாரியம்மன், கண்ணன் தூது, திரௌபதி சபதம், திருவிளையாடற் புராணம், அரிச்சந்திர மயான காண்டம் முதலான பல சைவசமய சம்பந்தமான கூத்துக்களையும் வெடியரசன், கண்டியரசன், பூதத்தம்பி முதலான அரச வரலாற்றுக் கூத்துக்களையும் குமுதினி குமுறுகிறாள், கொலைகாரன், பணம்படுத்தும்பாடு, ஏழுபிள்ளை நல்லதங்காள், அப்பன்டிசைட் முதலான பல சமூக நாடகங்களையும் பதச்சோறாக எடுத்துக் கூறலாம்.

ஆனால் பணப்புழக்கமும் ஏனைய வசதிவாய்ப்புக்களும் குறைவாக இருந்த காலத்தில் இப்படி பெருந்தொகையான கூத்துக்களையும் நாடகங்களையும் பழகி ஊருக்கு உள்ளேயும் வெளியேயும் மேடையேற்றி வந்தநிலைமை இன்று மலையேறிப் போய்விட்டது. மாறாக ஊருக்குள்ளே ஓரிரு கூத்துக்களையாவது பழக்கி அரங்கேற்றுவதற்குக் கூட பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியதுர்ப்பாக்கிய நிலைதான் ஏற்பட்டுள்ளது.

பொதுவாக பாரம்பரியக் கூத்துக்களை விரும்பிப் பார்க்கும் மக்கள் (பார்வையாளர்கள்) அருகிவிட்டனர் என்று கூறப்படுவது உண்டு. அதுநகர வாசிகளுக்குப்பொருத்தமாகவும் இருக்கலாம். ஆனால் நெடுந்தீவு போன்ற கிராமவாசிகளுக்கு இது பொருத்தமானதல்ல. ஆனால் இங்கு வேறுவிதமான பிரச்சினைகள் உள்ளன. இவற்றில் முக்கியமானவையாக பல பெற்றோர்கள் தமது பிள்ளைகள் கூத்துப் பழகுவதையும், நடிப்பதையும் நாட்டங்கொள்வதையும் அடியோடு வெறுக்கின்றனர். இதனால் பொருத்தமும் தகுதியுமுடைய பலர் இவ்வாறான முயற்சிகளிலிருந்துதடுக்கப்படுகின்றனர்.

நாளாந்தம்பயிற்சியை மேற்கொள்வதிலிருந்துநடிகர்களுக்கான தேநீர், உடை மற்றும் ஒப்பனைகளுக்கு வரும் செலவுகளுக்குமான பணத்தினை எந்த விதத்தில் பெறுவது என்று தலையைப் பிய்க்கும் நிலை பழக்குநர்களுக்குபிரத்தியேகமாக நெடுந்தீவு மக்கள் சீவனத்துக்கான தொழில்களைச் செய்து வருகின்ற காரணத்தினால் அங்கு வாழ்பவர்களில் வறுமையாளர்களே மிக அதிகம். இருக்கும் ஒரு சில வசதி படைத்தவர்களோ சிறு தொகையைக் கூட இத்தகு செயல்களுக்காக வழங்கும் மனோநிலையில் இல்லை. உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனங்களும்மற்றும்அமைப்புக்களும்பாரம்பரியக்கலைகளின் மேம்பாடு பற்றியோ அல்லது அதை மேம்படுத்துவது பற்றியோ எவ்வித அக்கறையும் கொள்வதாகத் தெரியவில்லை. பெயரளவில்மாத்திரம் இத்தகு கலைகளுக்கான ஓரிரு சங்கம் தெரிவு செய்யப்பட்டிருப்பதாக அறியப்படுகிறது.

இத்தகு பிரச்சினைக்கு மத்தியிலும் தமது வறுமையினையும் பொருட்படுத்தாது இன்றும் கலைப்பணி புரிபவர்கள் பலர் உள்ளனர். அவர்களுள் சைமன் ஜேசுதாசன், அ.அமிர்தநாதர் (வெள்ளைத் தம்பி) ஆகியோர் பூதத்தம்பி, வெடியரசன் முதலான கூத்துக்களைப் பழக்கிக் கொண்டிருக்கின்றனர். இத்தகையவர்கள் வடக்கு—கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ள வயது முதிர்ந்த பாரம்பரியக் கலைஞர்களுக்கான ஓய்வூதியத்திற்கு விண்ணப்பித்திருந்தும் உருப்படியான எந்த முடிவும் தெளிவாகவில்லை.

இவ்வளவு நடைமுறைச் சிக்கல்களுக்கு மத்தியிலும் குறிப்பிட்ட சில அண்ணாவிமாரும் குடும்பத்தினர் சிலரும் கலைப் பணிக்கென அயராது உழைத்து வருவதனையும் காணமுடிகிறது. இத்தகைய பின்னணியில் தான் இன்று அரங்கேற்றம் செய்யப்பட இருக்கும் 'ஞானசவுந்தரி நாட்டுக்கூத்து' உருப்பெற்றுள்ளது. ★

# போர்க் கைதிகளின் விடுதலை விவகாரத்தில் நெருக்கடியைச் சந்திக்கும் நிலையில் அரசு

விடுதலைப் புலிகளின் வசம் உள்ள போர்க்கைதிகளின் விடுதலை தொடர்பாக பொதுமக்கள் ஐக்கிய முன்னணி அரசாங்கம் தென்பகுதியில் பெரியதோர் நெருக்கடியை சந்திக்க வேண்டிய இக்கட்டான நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது.

போர்க் கைதிகளின் பெற்றோரும், உறவினர்களும் தாம் அரசாங்கத்தை பலவழிகளிலும் தூண்டப்போவதாகவும் தமது பிள்ளைகளின் விடுதலை தொடர்பாக அரசை இதயசுத்தியுடன் ஈடுபடுமாறு கோரவுள்ளதாகவும் தெரிவித்துள்ளனர்.

இந்த விடயத்தில் உள்நாட்டுச் சக்திகளைக் கொண்டு மட்டுமல்ல வெளிநாட்டுத் தூதரக அதிகாரிகள் மூலமும் அரசாங்கம் மீது அழுத்தம் கொடுக்க இருப்பதாக அவர்கள் மிரட்டியுள்ளனர்.

### அரசின் ஏனோ தானோ போக்கு

அரசு இது விடயத்தில் ஏனோ தானோ என்று பாராமுகமாகப் பொறுப்பற்ற முறையில் செயற்படுகின்றது. இராணுவ அதிகாரிகளைக் கேட்டால், அவர்கள் படையில் இருக்கும்வரை தான் தாங்கள் பொறுப்பு என்கின்றனர். கைதிகளாக மாறிய பின்பு அது அரசியல் சம்பந்தமான விடயம் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இவர்களின் உருக்கமான வேண்டுகோளை அடுத்து விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் கடந்த 28ஆம் திகதி போர்க்கைதிகளில் நால்வரை விடுதலை செய்தார். பிரபாகரனின் மேற்படி நடவடிக்கையானது தெற்கில் புலிகள் தொடர்பாக ஒரு ஒழுக்கமான கண்ணோட்டத்தை, சாதகமான முன்னேற்றத்தை ஏற்படுத்தியுள்ளது.

### தென்னிலங்கை மக்கள் மத்தியில் மனமாற்றம்

புலிகள் என்றால் ஆட்கொல்லிகள், குண்டுதாரிகள் மற்றும் பயங்கரவாதிகள் என்ற நிலைமாறி அவர்களும் மனிதர்கள், மனிதாபிமானம் உடையவர்கள், உரிமைக்காக மட்டுமே போராடுகிறார்கள் என்பதான ஒரு நிலை தென்னிலங்கை மக்கள் மத்தியில் உருவாகி வருவதை அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

விடுதலைப் புலிகள் போர்க் கைதிகளை விடுதலை செய்வது இதுதான் முதற்தடவை என்பதல்ல. இவர்கள் தம்வசம் இருந்த ஆறு இராணுவ வீரர்களையும் மூன்று சிவிலியன்களையும் 1998 நவம்பர் மாதம் 27ஆம் திகதி அதாவது புலிகளின் மாவீரர் தினத்தன்று முதல் முறையாக விடுதலை செய்தனர். இரண்டாவது தடவையாக 1999 மாவீரர் தினத்தை முன்னிட்டு ஏழு படைவீரர்கள் விடுதலை செய்யப்பட்டனர். பின்பு 1999 டிசெம்பர் 3ஆம் திகதி இரண்டு இராணுவ வீரர்களும் டிசெம்பர் 8ஆம் திகதி இரண்டு இராணுவ வீரர்களும் விடுதலைசெய்யப்பட்டனர்.

### சங்கத் தலைவர் கருத்து

காணாமற்போனோர் படையினர் சங்கத் தலைவர் திருமதி விசாக்க தர்மதாச கருத்துத் தெரிவிக்கையில் "நாம் விடுதலைப் புலிகளுக்கு எமது மனமார்ந்த நன்றிகளையும் வணக்கத்தையும் தெரிவிக்கின்றோம். எனது பிள்ளைகளில் ஒருவர் இராணுவ வீரர். கிளிநொச்சி இராணுவ நடவடிக்கையின் போது காணாமற் போய்விட்டார். அவர் உயிருடன் இருக்கிறாரா இல்லையா என்பது கூட எமக்குத் தெரியாது. எனது இன்னொரு மகன் இப்பொழுதும் இராணுவ சேவையில் இருக்கிறார். என்னைப் போன்ற எத்தனையோ தாய்மார் தமது பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்று கூடத் தெரியாமல் வேதனையில் வதங்கிக் கொண்டிருக்கின்றார்கள். நாம் எமது பிள்ளைகளை இந்த நாட்டைக் காக்கும் பணிக்குப் பெருமையுடன்தான் சேர்த்தோம். ஆனால் அரசாங்கம் இது குறித்து மௌனம் சாதித்து வருகிறது. ஏன் இந்த அவலநிலை?

நாம் அரசாங்கத்தைக் கேட்பதெல்லாம் எமது பிள்ளைகளான போர்க்கைதிகள் விடயத்தில் சற்று மனிதாபிமானத்துடன், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடன் செயற்பட வேண்டும் என்பதேயாகும்.

புலிகள் தமது இந்தச் செயலால் தாங்கள் பயங்கரவாதிகள் அல்லர் மனித நேயமுள்ள போராடும் இயக்கம் என்பதை எடுத்துக் காட்டியுள்ளனர். எத்தனை தடவைகள் இவர்கள் இவ்வாறு தம்மிடம் உள்ள கைதிகளை விடுதலை செய்துள்ளனர்; இதற்கு சமாதானம் வேண்டி கடுமையாக உழைக்கும் அரசாங்கம் செய்த கைமாறுதான் என்ன?" இப்படி அவர் கண்களில் நீர்ததும்பக் கூறினார்.

### நாடாளுமன்றத்தில் வெடிபொருள், தற்கொலை அங்கி

இதேவேளை ஜனாதிபதி கடந்த மாதம் 14ஆம் திகதி இந்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்க அனைவரும் வியக்கும் வண்ணம் நாடாளுமன்றத்தினுள் பிரவேசித்தார். அதற்கு சற்று முன்பு நாடாளுமன்றக் கட்டடத்தினுள் புகுந்த ஜனாதிபதியின் பாதுகாப்புப் பிரிவினர் அங்கு நின்றிருந்த அனைத்து உறுப்பினர்களையும் உடற்சோதனைக்கு உட்படுத்தினார்கள். இது தொடர்பாக எதிர்க் கட்சியினர் தமது அதிருப்தியினை வெளியிட்டதுடன் ஒழுங்குப் பிரச்சினையையும் எழுப்பினர்.

**அஜந்தன்**

இந்த நிலையில் சம்பவ தினத்தன்று நாடாளுமன்றத்தின் இரண்டாவது மாடியில் வெடிபொருள்களும் தற்கொலை அங்கிகளும் ஜனாதிபதி பாதுகாப்புப் படையினரால் கண்டுபிடிக்கப்பட்டன.

கடந்த மாதம் 29ஆம் திகதி வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டு

(12 ஆம் பக்கம் பார்க்க)

## தீர்வுப் பொதிக்குப் பதிலாக நாடாளுமன்றில் குண்டுப் பொதி!

## கொழும்பு மடல்

தாம் அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும் உத்தியோக பூர்வமாக விண்ணப்பம் ஒன்றை அனுப்பி இருப்பதாகவும் மக்களின் பிரதிநிதிகளாக நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் இவர்கள் இந்தப் பிரச்சினையில் கூடிய கவனம் எடுக்க வேண்டும் எனவும் படையினரின் காணாமற்போனோர் சங்கப் பிரதிநிதி ஒருவர் கூறினார்.

வன்னியில் தங்களின் விடுதலை கோரி கடந்த பெப்ரவரி 10ஆம் திகதி தொடக்கம் 15 போர்க்கைதிகள் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்த விடயம் ஏற்கனவே அறிந்ததே. இதனைத் தொடர்ந்து தெற்கில் உள்ள அவர்களின் உறவினர்கள், பாதுகாப்பு அமைச்சின் அனுமதியுடனும், செஞ்சிலுவைச் சர்வதேசக் குழுவின் வழித்துணையுடனும் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்துக்குக் கூட்டிச்செல்லப்பட்டனர்.


மலர்ந்திட்ட மிலேனியத்தில்

அகவை ஒன்று



திருவருட்செல்வன் ~ நளினி (கண்ணன் ~ செல்வி) தம்பதிகளின் அன்புப் புதல்வன்

* செல்வன் நிருபன் *

**தனது முதலாவது பிறந்த தினத்தை பிரான்ஸில் தன் இல்லத்தில் (05-03-2000) ஞாயிற்றுக்கிழமை இன்று வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார்.**

**நிருபனை இலங்கையிலுள்ள அப்பப்பா, அப்பம்மா, அம்மப்பா, அம்மம்மா, சித்தி, பெரியமாமா, பெரியத்தை, சித்தப்பா, சின்னத்தை, ஜேர்மனியிலுள்ள சித்தப்பா, சித்தி, மாமா, தம்பி கஜீபன், ஹம்சிகா மச்சாள், கனடா தாத்தா, சுவீஸ் தாத்தா, நோர்வே தாத்தா, பிரான்ஸிலுள்ள வாசன் தாத்தா, பூட்டிமார், கொப்பாட்டி அனைவரும் வைரவர் துணையுடன் பதினாறு செல்வங்களும் பெற்று சீரும்சிறப்புமாக பார்போற்ற பல்லாண்டு காலம் வாழ்க வாழ்க என வாழ்த்துகின்றனர்.**

தகவல்:
**சண்முகநாதன்**
(அப்பப்பா)

மானிப்பாய் வீதி,
மருதனார்மடம்.

(C/11306)


# விளையாட்டரங்கு

## இலங்கை உதைபந்தாட்ட அணிக்கு மீண்டும் பிறேசில் பயிற்றுநர்கள்

கொழும்பு,மார்ச்5

அடுத்த ஆண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டிக்கு இலங்கை உதைபந்தாட்ட அணியை தயார்படுத்தும் முகமாக புதிய பயிற்சியாளர்கள் இருவர் வெளிநாட்டில் இருந்து வரவழைக்கப்படவுள்ளனர்.

பிறேசில் நாட்டைச் சேர்ந்த மார்க்கோஸ் பரைரா, ஜோர்ஜ் பரைரா ஆகிய இருவருமே இலங்கை உதைபந்தாட்ட அணியின் புதிய பயிற்றுவிப்பாளர்களாக மீண்டும் நியமிக்கப்படவுள்ளனர்.

இந்த இருவரின் பயிற்சியின் கீழ் 1995ஆம் ஆண்டு இலங்கை அணி உதைபந்தாட்ட ஆசியக் கிண்ணத்தைக் கைப்பற்றியதும் -

அதன் பின்னர் அணி மிக மோசமான தோல்விகளை சந்தித்ததும் - குறிப்பிடத்தக்கது.

(ஐ-4)

## ஏழு விக்கெட்டுக்களால் நியூஸிலாந்து வெற்றி

கிறைற்சேர்ச்சில், மார்ச்5

ஆஸ்திரேலிய - நியூஸிலாந்து அணிகளுக்கு இடையில் நேற்று ஈடின்காட் மைதானத்தில் நடைபெற்ற ஆறாவதும் இறுதியுமான ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியில் நியூஸிலாந்து அணி 7 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஆஸ்திரேலிய அணி 47 ஓவரில் தனது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 191 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

192 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றி என்ற நிலையில் களமிறங்கிய நியூஸிலாந்து அணி 3 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து 42 ஆவது ஓவரிலேயே வெற்றிக்குத் தேவையான ஓட்டங்களைப் பெற்றது.

இதன்மூலம் நடைபெற்ற இந்த தொடரில் முதலாவது வெற்றியை நியூஸிலாந்து அணி பெற்றுள்ளது.

இருப்பினும் நடந்து முடிந்த இந்த ஒருநாள் சர்வதேச கிரிக்கெட் தொடரை ஆஸ்திரேலிய அணி 4-1 என்ற கணக்கில் வென்றுள்ளது.

ஆறு போட்டிகள் கொண்ட இந்தப் போட்டித் தொடரின் முதலாவது ஆட்டம் மழை காரணமாக கைவிடப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ஐ-4)

## இரண்டாவது கிரிக்கெட் ரெஸ்ட்டிலும் தென்னாபிரிக்கா வெற்றியின் விளிம்பில்

பெங்களூர்,மார்ச்5

இந்திய - தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையில் பெங்களூரில் நடைபெற்றுவரும் இரண்டாவதும் இறுதியுமான ரெஸ்ற் போட்டியில் மூன்றாம் நாளான நேற்று ஆட்ட நேர இறுதியில் தென்னாபிரிக்க அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 8 விக்கெட்டுக்களை இழந்து 472 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

தென்னாபிரிக்க அணிக்காக லயன்ஸ் குளூஸ்னர் 97 ஓட்டங்களையும் ஜக்கலிஸ் 95 ஓட்டங்களையும் எடுத்தனர்.

இந்திய அணியின் பந்து வீச்சில் அனில் கும்ப்ளே 5 விக்கெட்டுக்களையும் முரளி கார்த்திக் 2 விக்கெட்டுக்களையும் ஜவகர் ஸ்ரீநாத் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

முன்னதாக இந்திய அணி தனது முதலாவது இன்னிங்ஸில் 158 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது குறிப்பிடத்தக்கது.

(ஐ-4)

## மாவட்ட மட்ட விளையாட்டுப் போட்டிகள் 19இல் ஆரம்பம்

யாழ்ப்பாணம்,மார்ச்5

மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறை அமைச்சின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள மாவட்டரீதியான விளையாட்டுப் போட்டிகள் எதிர்வரும் 19ஆம் திகதி முதல் யாழ்ப்பாணத்தில் நடைபெறவுள்ளன.

யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி பத்தினியம்மா திலகநாயகம்போல் தலைமையில் இந்தப் போட்டிகள் நடைபெறும்.

19ஆம் திகதி வலைப்பந்தாட்டமும் மார்ச் 22 தொடக்கம் 30ஆம் திகதி வரை உதைபந்தாட்டமும் 25, 26ஆம் திகதிகளில் எல்லே (ஆண்)போட்டியும் யாழ். துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும்.

ஏப்ரல் 1, 2, 4ஆம் திகதிகளில் கரப்பந்தாட்டம் யாழ். மத்திய கல்லூரி மைதானத்திலும் -

8, 9ஆம் திகதிகளில் கிரிக்கெற் போட்டிகள் மல்லாகம் சிறீபாஸ்கரன் விளையாட்டு மைதானத்திலும் -

கபடி (ஆண், பெண்) போட்டி 16ஆம் திகதி பருத்தித்துறை கடற்கரை மைதானத்திலும் -

நடைபெறவுள்ளன.

இதற்கானஏற்பாடுகளை மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எவ்.ஜே. ரூபசிங்கம் மேற்கொண்டு வருகிறார்.

(ஐ-5)

## இன்றைய கிரிக்கெட்

யாழ்ப்பாணம்,மார்ச்5

மணிவதனன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான மென்பந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறும் ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

* காலை 8.30 மணிக்கு - நியூ கின்னஸ் எஸ்ரார் வி.க. எதிர் வில்ஸ் வி.க. - யுத்காமல் வி.க. எதிர் ஒஸ்க்கா வி.க.

* முற்பகல் 10.30 மணி - சென்றலைட்ஸ் வி.க. 'பி' அணி எதிர் கே.எவி.எபி.பி. வி.க. அணி - துர்க்கா வி.க. எதிர் சண் வி.க.

* பிற்பகல் 12.30 மணி - நொதேர்ண் வி.க. 'ஏ' அணி எதிர் ஈச்சமோட்டை வி.க. - அரியாலை ஐக்கிய கழகம் எதிர் லெவின் எஸ்ரார் வி.க.

* பிற்பகல் 2.30 மணி - சென்றலைட்ஸ் வி.க. எதிர் அண்ணா வி.க. - கச்சேரி எதிர் விக்டறி வி.க.

இந்தச் சுற்றுப்போட்டியில் யாழ் குடாநாட்டிலுள்ள 56 விளையாட்டுக் கழகங்கள் பங்குபற்றுகின்றன.

(ஐ-4)

* * *

வலி.வடக்கு,மார்ச்5

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக அணிக்கும் சென்றலைட்ஸ் விளையாட்டுக் கழகத்துக்கும் இடையேயான தோற்பந்து கிரிக்கெட் போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை பல்கலைக் கழக ஆடுகளத்தில் இடம்பெறவுள்ளது. (ஐ-4-86)

* * *

வலி.வடக்கு,மார்ச்5

வலி வடக்கு பிரதேச மட்ட தேசிய இளைஞர் சேவைகள் மன்ற இளைஞர் கழகங்களிடையே மென்பந்து கிரிக்கெட் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு மல்லாகம் ஸ்ரீ பாஸ்கரன் விளையாட்டு மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டியில் மல்லாகம் இளைஞர் கழகம், அளவெட்டி மேற்கு இளைஞர் கழகம், இளவாலை வெண்புறா இளைஞர் கழகம், காங்கேசன் துறை ஐக்கிய இளைஞர் கழகம், பன்னாலை இளைஞர் கழகம், அளவெட்டி இளைஞர் கழகம் ஆகியன கலந்து கொள்ளவுள்ளன.

(ஐ-4-86)

## எல்லே சுற்றுப்போட்டி

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கு இடையேயான எல்லே சுற்றுப்போட்டி இன்று ஞாயிறு காலை 8.30 மணிமுதல் புத்தூர் வீனஸ் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

## படகோட்டப் போட்டியில் நியூஸிலாந்து வெற்றி

வாஷிங்டன்,மார்ச்5

அமெரிக்கன்ஸ் படகோட்டப் போட்டியில் இந்த ஆண்டு நியூஸிலாந்தின் கிறேகஸ்ட் அணி வெற்றியீட்டியுள்ளது.

49ஆண்டுகளாக நடைபெற்று வரும் இந்த படகோட்டப் போட்டியில் அமெரிக்கா அல்லாத வேறொரு நாட்டு அணி வெற்றியீட்டியிருப்பது இதுவே முதல் தடவை. (ஐ-4)

# அவசர நடவடிக்கைக் குழு நிறுவ ஜனாதிபதி இணக்கம்

## பெருமாளுடனான சந்திப்பின்போது

கொழும்பு,மார்ச்5

படையினர் தொடர்பான பிரச்சினைகள் உட்பட தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பலதரப்பட்ட பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பதற்கு அவசர நடவடிக்கைக் குழு (Task Force)ஒன்று விரைவில் அமைக்கப்பட உள்ளது.

வடக்கு - கிழக்கு முன்னாள் முதலமைச்சர் வரதராஜப்பெருமாள் அண்மையில் ஜனாதிபதியைச் சந்தித்த போது ஜனாதிபதி இதற்கான உறுதிமொழியை வழங்கினார்.

இந்தச் சந்திப்பின்போது தமிழ் மக்களின் பிரச்சினைகள் குறித்து வரதராஜப் பெருமாள் ஜனாதிபதியிடம் விரிவாக எடுத்துக் கூறினார்.

இதனை அடுத்தே தமிழ்மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக அவசர நடவடிக்கைக் குழுவை அமைப்பதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்தார்.

படையினர் தொடர்பான தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண்பதற்கு இந்தக் குழு முன்னுரிமை வழங்கும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இந்த சந்திப்பின்போது இனப்பிரச்சினைக்கு தீர்வு காணும் விடயம் தொடர்பாகவும் ஜனாதிபதியும் வரதராஜப் பெருமாளும் கலந்துரையாடினர் என்று கூறப்பட்டது.

(இ-6)

# இங்கு நவீன கிராமம் அமைப்பதற்கு முயற்சி

## கொழும்பில் நடந்த கூட்டத்தில் முடிவு

கொழும்பு,மார்ச்5

யாழ். மாவட்டத்தில் சகல வசதிகளும் கொண்ட நவீன கிராமம் ஒன்றை அமைக்கும் திட்டம் ஒன்றுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் அசோக ஜெயவர்த்தனா தலைமையில் நேற்றுக் முன்தினம் கொழும்பில் நடந்த கூட்டத்திலேயே இத்திட்டம் குறித்து தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த திட்டத்தை நடைமுறைப் படுத்த யாழ்நகரில் இருந்து சில மைல் தொலைவுக்குள் 50 ஏக்கர் விஸ்தீரணமுள்ள காணியைத் தெரிவுசெய்து அறிவிக்கும்படி அக்கூட்டத்தில் கலந்து கொண்ட யாழ். அரச அதிபர் க.சண்முகநாதன் ஆளுநரால் கேட்கப்பட்டுள்ளார்.

பாடசாலை, சந்தை, நூலகம் ஆகியன கொண்டதாக இந்தக் கிராமம் அமைக்கப்படும்.

### போர்க் கைதி....

(11 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சட்ட குழுநிலை விவாதத்தில் இதனை வெளியிட்ட நாடாளுமன்ற விவகார அமைச்சர் ஜெயராஜ் பெர்னான்டோபுள்ளே நாட்டின் தலைவிக்கு அதியுயர் பாதுகாப்பு அவசியம் என்பதனை எதிரணியினரும் புரிந்து கொள்ளவேண்டும் என்று கூறினார். அத்துடன் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவினர் மாத்திரமன்றி தேவை ஏற்படின் 'ஸ்கொட்லாண்ட் யாட்'டும் வரவழைக்கப்படவேண்டும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை பிரதி அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தமது உரையில், ஜனாதிபதி வருகைதந்த தினம் நாடாளுமன்றின் அலுமாரிக்குள் இருந்த வெடிகுண்டு பாதுகாப்புப் பிரிவின் மோப்ப நாய்கள் மூலம் கண்டுபிடிக்கப்பட்டதாகவும் பரிசோதனைக்காக அவை வைக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

மீண்டும் கடந்த புதன்கிழமை நாடாளுமன்றம் கூடியபோது ஐக்கிய தேசியக் கட்சியின் செயலாளர் காமினி அத்துக்கோறள சபாநாயகர் கே.பி.இரத்நாயக்காவிடம் இது தொடர்பாக பூரண விசாரணை நடத்தப்படவேண்டும் என்று கோரிக்கை விடுத்தார்.

நாடாளுமன்றத்துக்கு வரவேண்டிய தீர்வுப்பொதி இன்னும் வரவில்லை. ஆனால் வரவே கூடாத குண்டுப்பொதி வந்திருக்கின்றது என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டார்கள்.

### படையினரின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இயக்கத்தைச் சேர்ந்த அன்பு என்பவர் என்றும் -

கடந்த முதலாம் திகதி தனங்களப்புப் பகுதியில் நெல் அறுவடை செய்துகொண்டிருந்த விவசாயிகள் மீது ஷெல்தாக்குதல் நடத்துவதற்கு இவர் உடந்தையாக இருந்தார் என்றும் -

இவரிடமிருந்து நான்கு கைக்குண்டுகள் கைப்பற்றப்பட்டதாகவும்- யாழ். பாதுகாப்பு தலைமையகம் நேற்றிரவு வெளியிட்ட செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளது.

(இ-5-9-31-117-173)

### சாய்ந்த........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காயமடைந்த பொலீஸாரான ஏ.ஆர்.இசாத்தின், எம்.இலியாஸ ஆகிய இருவரும் ஆபத்தான நிலையில் அம்பாறை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (இ-5)

### ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திப்புக் குறித்து ஆராய இருக்கிறது.

ஜனாதிபதியுடனான சந்திப்பின் போது ஐ.தே.க.என்னென்ன விடயங்கள் குறித்துப் பேசுவதென்பது பற்றி நாளைய கூட்டத்தில் தீர்மானிக்கப்படும்.

ஜனாதிபதியுடனான சந்திப்பில் ரணில் விக்கிரமசிங்க, செயலர் காமினி அத்துக்கோறள, தவிசாளர் கருஜெயசூரிய ஆகியோர் ஐ.தே.க தரப்பில் கலந்து கொள்ளலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது. கடந்தமாதம் 22 ஆம் திகதியும் இதே போன்ற அழைப்பை ஜனாதிபதி விடுத்திருந்ததும் கால அவகாசம் போதாது என்று கூறி ரணில் அந்தப் பேச்சில் கலந்துகொள்ளாததும் தெரிந்தவையே.

அதனை -அடுத்தே எதிர்வரும் 9 ஆம் திகதிக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டு அது ஐ.தே.கவினால் ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

(இ-6-5)


**தேவை**

எமது ஸ்தாபனத்துக்கு அனுபவமுள்ள

* ரீ.மேக்கர் * பில் கிளாக்

உடன் தேவை

தொடர்புகளுக்கு:

குலம் கிறீம் ஹவுஸ்
இல.226 ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.

(C/11308)



**தேவை**

கணனியில் 'ரைப்செற்றிங்' செய்வதற்கு தட்டச்சில் அனுபவம் உள்ள பெண்கள் தேவை. நகரப் பகுதியிலிருந்து 4 மைல் சுற்றாடலுக்குள்ளும் அத்துடன் கணனி பற்றிய பரந்த அறிவுள்ளவர்களும் விரும்பத்தக்கது.

RAM PRINTERS
51,PALALY ROAD,
JAFFNA.

(74210)


பௌத்த பீடத் தலைவர்கள் மாநாட்டில்

# வெளிநாடு ஒன்றின் தலையீடு தேவை இல்லை எனத் தீர்மானம்

கொழும்பு,மார்ச்5

இலங்கை இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டு விவகாரம் அதில் வெளிநாடு ஒன்றின் தலையீடு தேவை இல்லை. அரசாங்கம் அரசமைப்புச் சீர்திருத்தங்களை மேற்கொள்ளக் கூடாது.

மேற்கண்டவாறு பௌத்த மதபீடத் தலைவர்கள் தீர்மானம் நிறைவேற்றி உள்ளனர்.

மல்வத்தை மகாநாயக்கர் தலைமையில் நேற்று கொழும்பில் நடைபெற்ற பௌத்த மதபீடத் தலைவர்கள் மாநாட்டில் இந்தத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த மாநாட்டில் அஸ்கிரிய, ரம்புக்கல, விபஸ்த ஆகிய பீடங்களைச் சேர்ந்த பௌத்த பிக்குகள் கலந்து கொண்டனர்.

இனப்பிரச்சினையில் நோர்வே அரசு மேற்கொண்டுள்ள சமாதான முயற்சிகளையும் இந்த மதத் தலைவர்கள் கண்டித்துள்ளனர்.

(இ-6)

# 2 ஆவது தொகுதி சமுர்த்தி நியமனம் விரைவில் பெயர்ப்பட்டியல் வரும்

தென்மராட்சி.மார்ச்5

யாழ். மாவட்டத்தில் உள்ள அனைத்து கிராம அலுவலர் பிரிவுகளுக்கும் மேலும் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் நியமிக்கப்படவுள்ளனர். இதற்கான பெயர்ப் பட்டியல் சமுர்த்தி ஆணையாளரினால் விரைவில் யாழ். அரசாங்க அதிபர் ஊடாக அந்தந்தப் பிரதேச செயலகங்களுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளதாகத் தெரியவருகிறது.

ஒரு கிராம அலுவலர் பிரிவுக்கு இரண்டு சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர் என்ற ரீதியில் இரண்டாவது பிரிவுக்கான பெயர்ப்பட்டியலே அனுப்பி வைக்கப்படவுள்ளது. ஏற்கனவே மாவட்டத்திலுள்ள பிரதேச செயலர் பிரிவுகளில் சமுர்த்தி அபிவிருத்தி அலுவலர்கள் நியமிக்கப்பட்டு கடமையாற்றி வருவது குறிப்பிடத்தக்கது.

சமுர்த்தி ஆணையாளரினால் அனுப்பப்படவுள்ள பட்டியலில் பெயர் உள்ளவர்களுக்கு அந்தந்தப் பிரதேச செயலகங்களில் நேர்முகப் பரீட்சை நடத்தப்பட்ட பின்னர் நியமனங்கள் வழங்கப்படலாமெனவும் தெரியவருகிறது.

### எழுச்சி நிகழ்வு

யாழ்.மறைமாவட்ட கத்தோலிக்க திருச்சபையின் ஒன்றுகூடலும் எழுச்சி நிகழ்வுகளும் இன்று யாழ்.மரியன்னை பேராலயத்தில் நடைபெறவுள்ளது.

யாழ்.ஆயரின் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வுகளில் மறைமாவட்டத்தைச் சேர்ந்த 3 ஆயிரத்து ஐந்நூறு திருப்பாலகர்கள் கலந்துகொள்ளவுள்ளனர்.

தேசிய திருப்பாலத்துவ சபை தமிழ்ப்பகுதி செயலாளர் அருட் திரு சகோதரி நிர்மலா இந்நிகழ்வுகளில் சிறப்பு விருந்தினராக கலந்துகொள்ளவுள்ளார். (இ-5)

# டென்னிஸ் வீராங்கனை அனா ஹொக்கி வீரரை திருமணம்?

ரஷ்ய இளம் டென்னிஸ் வீராங்கனை அனா குவார்னி கோவாவும் தேசிய ஹொக்கி லீக் ஐஸ் ஹொக்கி வீரர் பவெல் புருவும் திருமணம் செய்யவுள்ளதாக பிரிட்டிஷ் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டுள்ளன.

18வயதுடைய அனா குவார்னி கோவாவும் 28 வயதுடைய பவெல் புருவுக்கும் இடையில் நட்பு மலர்ந்து 4 மாதங்களே ஆகியுள்ள நிலையில் இந்தத் திருமணச் செய்தி பலருக்கு வியப்பை அளித்துள்ளது.

கவர்ச்சித் தோற்றமுடைய அனாவின் முன்னாள் காதலர் சேர்ஜி பெடொரோவின் நண்பரே பவெல் புரு என்பது குறிப்பிடத்தக்கது.

புளோரிடா பான்தர்ஸ் அணிக்காக விளையாடி வருபவரும் 'ரஷ்யன் ரொக்கற்' என அழைக்கப்படுபவருமான பவெல் கடந்த பெப்ரவரி மாதம் நடைபெற்ற 50ஆவது தேசிய ஹொக்கி லீக் ஆல்ஸ்ரார் ஆட்டத்தின் போது மிகப் பெறுமதிவாய்ந்த வீரர் விருதை வென்றெடுத்திருந்தார்.

ஜனவரி மாதம் இடம்பெற்ற ஆஸ்திரேலிய பகிரங்க டென்னிஸ் போட்டிகளின் போது அனாவும் ஆஸ்திரேலிய டென்னிஸ் வீரர் மார்க் பிலிப்பொஸிஸ்"வும் இணைத்துப் பேசப்பட்டிருந்தனர். ஆனால் தாம் சிறந்த நண்பர்கள் மட்டுமே எனக் கூறி அனாவும் மார்க்கும் மேற்படி ஊகங்களை மறுத்திருந்தனர்.

### புலி உறுப்பினர் உயிரிழப்பு

வவுனியா,மார்ச்5

நேற்றுமுன்தினம் வாகரைப்பகுதியில் இடம்பெற்ற தவறுதலான வெடிவிபத்தில் தமது தரப்பில் கப்டன் காளி (அலெக்சாண்டர் துஷ்யந்தன் - மன்னார்) என்பவர் உயிரிழந்ததாக விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர். (இ-4)

### வெக்டர் இறுதிக்கிரியை

யாழ்ப்பாணம்,மார்ச்5

பொ.வேலாயுதத்தின் (வெக்டர்) இறுதிக்கிரியைகள் நேற்று உடுப்பிட்டியில் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் பெரும் எண்ணிக்கையான ஆசிரியர்களும் குடாநாட்டின் கணிதத்துறை மாணவர் சமூகமும் குழுமியிருந்ததைக்காண முடிந்தது.

58வயதான இவரது திடீர் மறைவு கணிதம் கற்கும் தமிழ மாணவர்களுக்கு ஒரு பேரிழப்பு என இரங்கலுரையில் தெரிவித்தனர்.

(இ-4-9)


எமது பிரமிட் வீடியோ C.D வெளியீடுகள்.

* முதல்வன்
* பொலீஸ் அதிகாரி
* ஏழையின் சிரிப்பு
* குட்லக்

வீடியோ விஷன்
யாழ்ப்பாணம்.

(C/11314)


# மாவை, கீரிமலை ஆலயங்களை புனரமைக்க மேலும் ரூ.40லட்சம்

கொழும்பு,மார்ச்5

மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயில், கீரிமலை நகுலேஸ்வரர் கோயில் ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டுவரும் புனரமைப்பு வேலைகளைப் பூர்த்தி செய்ய 40 லட்சம் ரூபாவுக்கான காசோலை ஜனாதிபதியின் பணிப்பின் பேரில் நேற்று முன்தினம் வழங்கப்பட்டுள்ளதாக ஈ.பி.டி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். தவராசா தெரிவித்தார்.

இவ்விரு கோயில்களின் புனரமைப்புக்கும் என இரண்டு கோடி ரூபா வழங்குவதற்கு ஏற்கனவே இணக்கம் தெரிவிக்கப்பட்டிருந்தது.

அதில் நூற்று அறுபது லட்சம் ரூபாவே இதுவரை வழங்கப்பட்டிருந்தது எனவும் -

எஞ்சிய தொகையை வழங்கி புனரமைப்புப் பணியைத் துரிதமாக மேற்கொள்ளவேண்டும் என்றும் தாம் ஜனாதிபதியிடம் கோரியிருந்ததாகவும் -

அதை அடுத்தே இந்த உதவி வழங்கப்பட்டுள்ளது என்றும் -

எம்.பி.தவராசா மேலும் தெரிவித்தார்.

(உ-3)


**முதலாம் ஆண்டு நினைவஞ்சலி**

தோற்றம் 31 - 10 - 1956



மறைவு 15 - 02 - 1999

**திருமதி சந்திரபிரபா லோகஞானம்**

(உபஅஞ்சல் அதிபர், யாழ். பல்கலைக்கழகம்)

திதி: 05.03.2000

உண்டுப் பறவை அது
ஓடிப் பறந்து ஒருவருடம் ஆகிவிட்டது
எண்டுவரை உன்நினைவு
இதயத்தை உலுக்குதம்மா!
ஆண்டுகள் பல நாம் சோடியாக
அவனியில் திரிந்த காலம்
வாட்டி நிற்கிறதே பிரபா
தேற்றிவிட யாரும் இல்லை.

கணவர்.

திருநெல்வேலி. (74177)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 05-03-2000 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.